## எங்கள் வெளியீடுகள் :

### கதை அம்மானை நாடக புத்தகங்கள்

- ★ விக்கிரமாதித்தன் கதை
- ★ பஞ்சபாண்டவர் வனவாசம்
- ★ மதனகாமராசன் கதை
- ★ நல்லதங்காள் கதை
- ★ மதுரை வீரசுவாமி கதை
- ★ காத்தவராய சுவாமி கதை
- ★ சித்திரா புத்திர நாயனார் கதை
- ★ வைகுந்த அம்மானை
- ★ கள்ளழகர் அம்மானை
- ★ ஒட்ட நாடகம்
- ★ கர்ணமோட்சம் நாடகம்
- ★ துரோபதை குறவஞ்சி நாடகம்
- ★ பாரத விலாசம் (சூதுதுகில்)
- ★ அல்லி நாடகம்
- ★ கோவலன் நாடகம்
- ★ வாலிமோட்ச நாடகம்
- ★ அரக்கு மாளிகை நாடகம்
- ★ சனிவார விரத நாடகம்
- ★ சுபத்திரை மாலையீடு நாடகம்
- ★ கிருஷ்ண விலாசம்
- ★ பவளக் கொடி நாடகம்
- ★ முதல் நாள் சண்டை நாடகம்
- ★ பதினெட்டாம் போர் நாடகம்
- ★ வெங்கடேச பெருமாள் நாடகம்
- ★ அபிமன்னன் சண்டை நாடகம்
- ★ ஏணியேத்த நாடகம்

**B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்**
26, வெங்கட்ராம தெரு, கொண்டித்தோப்பு,
சென்னை – 600 079. போன் : 25201053

பெரிய எழுத்து

# நல்லதங்காள் கதை

(படங்களுடன்)



**B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்**
சென்னை – 600 079,

உ

புகழேந்திப்புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

# நல்லதங்காள் கதை

[ படங்களுடன் ]



## B. இரத்தின நாயகர் & சன்ஸ்

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.
நெ. 26, வெங்கட்ராம தெரு,
கொண்டித்தோப்பு, சென்னை - 600 079.

பதிப்புரிமை) ரூ.35.00

© அனைத்து உரிமைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் இருந்து எந்தவொரு விஷயமானாலும்/ படங்களானாலும் முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ, பதிப்பாளரின் எழுத்துப் பூர்வமான அனுமதியின்றி, மற்றவர்கள் பிரசுரித்தாலோ, மற்ற மொழியில் மொழி பெயர்த்தாலோ சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளுக்கு உட்படுவார்கள்.

இடைக்குமிடம்: B. இரத்தின நாயகர் & சன்ஸ்
சென்னை - 79. போன் : 2520 6622

பதிப்பகம் : திருமகள் விலாச அச்சகம்,
சென்னை – 79.

உ
கடவுள் துணை

# நல்லதங்காள் கதை

## தோத்திரங்கள்

### கலி விருத்தம்

இந்துவேணிய னீஸ்வரியேபொற்பினில்
தந்துவா மிந்த நல்லதங்காள்கதை
முந்துசெந்தமிழ் மொழியவொருகொம்பு
சிந்துர பிருசேவடி போற்றியே.

### விநாயகர் துதி

வேழமுகத்தோனே விநாயகரே முன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
அத்திமுகத்தோனே அரனார் திருமகனே
சத்திகணபதியே சரிந்தவயிற்றோனே
கரிமுகப்பிள்ளையாரே கணபதியேமுன்னடவாய்
பிரியமாய் நல்லதங்காள் பெண்ணிரகதைபாட
அறியாதான் நாவதனில் அன்பாய்வருவதற்கு
துரிதமுடனே துணையாக நீ வருவாய்
தும்பிக்கையுள்ளவரே துன்பங்கள்வாராமல்
நம்பிக்கைவைத்தேன் நாவிற்குடியிருந்து
ஆனைமுகப்பிள்ளையாரே ஐங்கரனேமுன்னடவாய்
பானைவயிற்றோனே பரமசிட புத்திரனே
பாடவேயெந்தனுக்கு பகவானேவந்தருளும்

### சிவசுப்பிரமணியர் துதி

திருத்தணிகைவேலவனே திருமால்மருகோனே
கருத்துவைத்துயெந்தனை நீ காத்தருளவேணுமையா
வள்ளிமணவாளா மகேஸ்வரனார்புத்திரனே
புள்ளிமயிலேறும் புண்ணியப்போரூரா
நல்லதங்காள்கதையை நலமாகப்பாடுதற்கு
புல்லறிவன்என்னுவில் புண்ணியரே நீயிருந்து

கூடத்துணையிருந்து குற்றங்கள் வாராமல்
பாடத்துணையெந்தனுக்கு பகவானேவாக்கருளும்

## சரஸ்வதி துதி

தாமரைசெங்கமலம் தன்னிற்பிறந்தவளே
கோமளசரஸ்வதியே கொம்பனையாள் நல்லதங்காள்
புண்ணியவதிகதையைப் புகழாகப்பாடுதற்கு
எண்ணியிருந்த எளியேனுடநாவில்
சொந்தமாய்ப்பாடுதற்கு தோகையேயிப்போது
வந்துகுடியிருப்பாய் மறையவனார்தேவியரே
பூவிலுதித்ததொரு பொற்கொடியேயெந்தனுக்கு
நாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை

## சந்தக் கலிவிருத்தம்

மஞ்சுகுழல்பிஞ்சுமுலை வஞ்சிநல்லதங்காள்
விஞ்சுவரலாறுசொல்ல துஞ்சுசிவனார்முன்
கொஞ்சுமுமைமாதுதரு குஞ்சரகணேசன்
செஞ்சரணகஞ்சமல ரஞ்சலிசெய்வாமால்.

## கதையின் வரலாறு

திங்கள்மும்மாரிபெய்யுஞ் சீரானநன்னாடு
எங்குமணிவிளையும் எழிலானநன்னாடு
செஞ்சாலிநெல்விளைந்து செழிக்கும்வளநாடு
தஞ்சலிறையாமல் தழைக்கும்வளநாடு
நாற்றைப்பிடுங்கிப்பள்ளர் நன்றாய்நடுவார்கள்
சேற்றைக்குழப்பிப்பள்ளர் திறமாய்நடுவார்கள்
வயலிற்களைபிடுங்கி மாதர்கள்போடுவார்கள்
தோள்மேலெடுப்பார்கள் சுமந்துநடப்பார்கள்
ஆள்மேலெடுப்பார்கள் அசைந்துநடப்பார்கள்
கார்நெல்லறுப்பார்கள் களத்தண்டைகொட்டுவார்கள்
வார்கொள்மாட்டைப்பிடித்து வந்துபிணைகட்டுவார்கள்
சாரிநெல்லுதிரும்படி சார்ந்தேயுழுவார்கள்
இனிதானதொழில்களிலே ஏதும்வழுவார்கள்
ஏரடிக்கும்பண்ணையாட்கள் எங்குந்திரிவார்கள்
போரடித்துநெற்படுத்திப் பூசைபுரிவார்கள்
பூங்காப்பெருமைதனைச் சொல்லிமுடிபோகாது
பூங்காவனப்பெருமை புகழத்தொடங்கினேன்காண்
துலங்கும்வாழைமரங்கள் இலங்குபலாமரங்கள்



குலுங்கும்பாக்குமரங்கள் நலங்கொள்தேக்குமரங்கள்
மாமரச்சோலைகளும் மருதிலுப்பச்சாலைகளும்
தாமமிகுசந்தனமும் தவளமிகுந்தவனம்
தக்கசாமந்திகளும் சண்பகப்பூப்பந்திகளும்
மிக்ககுயில்பாட வீறுமயிலாட
ஆண்டிகள்தங்குமிடம் அரவிந்தம்பூத்தவிடம்
பாண்டிமகாநாட்டில் பாகமிகவுண்டென்று
முதுவரிகளோரெல்லாம் முன்னுரைத்தசாஸ்திரத்தில்
மதுராபுரியென்று வானவர்முதல்சொல்வார்கள்
திக்கெட்டுமன்னர்பதம் தென்மதுரைமாநகரம்
சூழ்வினைத்துன்பமெல்லாம் தொலைக்குந்திருநகரம்
வாழ்விக்கும் அட்டசெல்வம் மன்னுந்திருநகரம்
வாணுளரிபிரமர் வந்திருக்குந்தன்னகரம்
மீனாட்சிமாதுமையாள் மேவுஞ்சீர்பொன்னகரம்
உப்பரிமாளிகையும் உயர்ந்தபெருமாளிகையும்
செப்பரியமாடங்களும் சேர்ந்தசித்ரகூடங்களும்
செம்பொன்னாற்கோட்டைகளும் திகழரியபேட்டைகளும்
அம்பொன்னாற்கோயில்களும் அழகானவாயில்களும்
முத்துச்சிவிகையேறும் முடிமன்னர்வீதிகளும்
தத்துப்பரியேறும் தடமன்னர்வீதிகளும்
வேல்கொடுக்கும்மன்னர்பலர் மேவியேவாழ்வீதிகளும்
கோல்கொடுக்கும்வேளாளர் கூடியேவாழ்வீதிகளும்
சாத்திரஞ்சொல்லுகின்ற சதுர்மறையோர்வீதிகளும்
காத்திரஞ்சேர்வாணிபஞ்செய் கனவணிகர்வீதிகளும்
கொட்டிகட்டுபணிகள்செய்யும் கொல்லர்வாழ்வீதிகளும்
தட்டிப்பணிகள்செய்யும் தட்டாரவீதிகளும்
பதினெட்டுஜாதிவகை பலமன்னர்வீதிகளும்
துதிபெற்றமதுரையிலே சொல்லவுங்கூடாது
தராதலத்துமன்னர்களில் சந்திரகுலத்துதித்தோன்
நராதிபனும்ராமலிங்க நல்லமகாராஜன்
மணிமகுடந்தாங்கி மனக்களிப்புமேலோங்கி
அணிமதுரைபட்டணத்தை அரசாட்சிசெய்யவென்று
செங்கோல்பிடித்துச் சிறப்போடரசுரிமை
மங்காதமண்டலத்தை மநுநீதிதப்பாமல்
ஆறிலொருகடமை அரசனும்வாங்குவன்காண்
மாறியெவர்க்கும் வாக்குப்பிசகானே
இந்தப்புவிதனிலே இந்திராணியென்பவளைச்
சுந்தரமாய்தாலிகட்டி சுகிர்தமுடனரசிற்
சிங்காதனமேறித் தேர்வேந்தர்வீற்றிருந்தார்
சிங்காதனத்திருந்த ஆரணசாஸ்திரிமார்
வேதியரும்சோதிடரும் வேந்தர்முகம்பார்த்து

நீதியெடுத்து நிகழ்த்தலுற்றார்மன்னனுக்கு
எட்டுநவகோண மூலகாளும்எழில்வேந்தே
பட்டந்தனக்குப்பிள்ளை பாராளவில்லையே
தங்களரசுரிமை தானாளவில்லையே
எங்களரசனே யாங்களென்னசெய்வோமென்றார்
சொன்னமொழிகேட்டுத் தோன்றல்சினமடைந்து
தன்னரசுபட்டமாளத் தான்பிள்ளையில்லையென்று
எண்ணாவிசாரமுடன் ஏக்கமிகவடைந்து
மண்ணாளும்செங்கோல் மந்திரிதனக்கீந்து
மனைவிதனையழைத்து வன்காட்டிடஞ்சென்று
கனைபடர்ந்தமேருவிடந் தோன்றல்மனைவியுடன்
உலகாண்டதைமறந்து ஊமைமௌனியர்போல்
இலகுதிருநீற்றை எங்குமேதானணிந்து
சலியாதுருத்திராட்சந் தானணிந்துமனைவியுடன்
புலியாசனம்போட்டுப் பொற்பாயிருபேரும்
புல்லும்படியமர்ந்து பூசைவழிபாடு
அல்லும்பகலுமாக வாசியாலேசிவனை
மனதிலிருத்தியே வந்தித்தார்சிந்தையுள்ளே
கனகவுமைமாது கண்டாளிவர் தவசை
பரமசிவனைநோக்கிப் பார்வதியாள்சொல்லுகிறாள்
வரமிகுந்தநாதாவே மாதவத்தைக்கண்டீரோ
பிள்ளைக்குவேண்டுகிற பெருந்தவசைப்பார்த்தீரோ
கொள்ளையிதுவரையில் குவலயத்திற்கண்டறியோம்
தவசுக்குத்தான்மகிழ்ந்து தக்கமைந்தனைக்கொடுப்பீர்
சிவபெருமான்கண்டு சிந்தைமகிழ்ச்சிகொண்டு
எருதேறியிருவருமே ஏகாந்தமாகவந்தே
விருதுபெறமைந்தனை விரும்பிமிகக்கொடுத்தார்
பெண்ணொன்றுபிள்ளையொன்று பிறக்கும்படிகொடுத்தார்
மண்ணரசன்மனைவியொடு மாதாவைத்தான்தொழுது
விமலனைபோற்றிசெய்து வீடுவந்துசேர்ந்தார்
தமக்கிரண்டாண்டுக்குள் தனயர்பிறந்திடவே
தக்கமைந்தனுக்கும் நல்லதம்பியென்றுபெயருமிட்டு
ஒக்கநல்லதங்கையென உத்தமியைத்தான்வளர்த்தார்
பள்ளிக்குவைத்தார்கள் பாலரிருவரையும்
தெள்ளுதமிழ்தெலுங்குந் தேர்ந்தேவுணர்ந்தார்கள்
வில்வித்தையானையேற்றம் மிக்ககுதிரையேற்றம்
கல்விபயிற்சியெல்லாம் கற்றுத்தெளிந்தார்கள்
மைந்தன்தனக்கு மணமுடிக்கவேணுமென்று
குந்தளதேசமாளும் கோமுகன்பெற்றெடுத்த
மூளியலங்காரி மொய்குழலாள் நாயகியை
நாளிட்டுக்கேட்டு நல்லமணமுடித்தார்



மணமுடித்தபத்தாநாள் மாதாயிறந்துவிட்டாள்
இணையிலிந்திராணிபோக இராமலிங்கமகாராஜன்
மனைவியும்போனவுடன் மைந்தன்தனையழைத்து
தனையன்தனக்கரசை தானீந்துசொல்லலுற்றார்
நல்லதம்பியிவ்வுலகை நானாண்டவாறுபோல
வல்லமுடிதரித்து மண்ணுலகில்மாந்தர்க்கு
குறைவுவராமலேநீ குடிகளனைவோர்க்கும்
நின்றசெங்கோல்கோணாமல் நீதிசெலுத்திடுவாய்
உந்தனுடன்பிறந்த உற்றநல்லதங்காளை
எந்நாளும்பசுமை யெய்தியிருக்குமிடம்
ஆராய்ந்துபார்த்து அழகாய்மணமுடித்து
சீராகச்சீதனங்கள் சிந்தைமகிழ்ந்தீந்து
அரசாட்சியுலகை யாண்டிருப்பாயென்றுசொல்லி
பிச்சுமலர்க்கொன்றைப் பெம்மானைவுள்ளிருத்தி
இராமலிங்கமன்னவனும் இறந்தவுடன்நல்லதம்பி
கருமாதிகாரியங்கள் கனமாய்முடித்தாச்சுது
ஒருபோதும்பொல்லாங்கு உலகத்துக்கெய்தாமல்
தேசுபெறச்செங்கோல் செலுத்தியேவாழ்ந்திருக்க
காசிமகாராஜன் கனமதுரைவந்துசேர்ந்து
நல்லதம்பியைநோக்கி நல்லதங்காள்நாயகியை
வல்லமணம்செய்ய வார்த்தைகள்மிகப்பேசி
பரியங்கொடுத்தானே பத்துலட்சம்பொன்னிதிகள்
பிரியமுடன்நல்லதம்பி பெண்கொடுக்கவேயிசைந்தான்

## திருக்கலியாணச் சிறப்பு

சாந்தால்சரிகுழலே சற்குணமேநல்லதங்காள்
நாளிட்டநாள்முகூர்த்தம் நாடெங்கும்தானறியக்
கலியாணம்கலியாணம் காரிகைக்குக்கலியாணம்
என்றைக்குக்கலியாணம் எங்களிளங்கொடிக்கு
சித்திரைமாசத்திலே செல்வக்கலியாணம்
கலியாணமென்றுசொல்லிக் கப்பலேறிப்பாக்குவைத்தார்
மட்டில்லாப்பாக்குவைத்து மனிதர்க்குப்போகவிட்டார்
சின்னமடிகோலிச் சீமையெங்கும்பாக்குவைத்தார்
பெரியமடிகோலிப் பூமியெங்கும்பாக்குவைத்தார்
பனையின்மரம்பிளந்து பந்தக்கால்செபபனிட்டார்
தென்னமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசக்கால்செப்பனிட்டார்
முத்துமரம்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
இட்டார்கள்பந்தலை இருபதுகாதவழி
தொட்டார்கள்பந்தலை தொண்ணூறுக்காதவழி

முந்நூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்பிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள் தாலியைக் கழுத்திலேயென்றுரைத்தார்
தாலிதரிப்பதற்குத் தார்வேந்தனப்போது
அஸ்தமிட்டமங்கிலியம் அவ்வரசன்தான்வாங்கி
அரகாரவென்றுசொல்லி அணிந்தாரேமங்கிலியம்
கன்னிதிருக்கழுத்தில் கட்டிஞர்மங்கிலியம்
மாதுதிருக்கழுத்தில் மங்கிலியஞ்சூட்டிஞரே
தாலிதரித்தபின்பு தார்வேந்தர்நல்லதம்பி
வந்தவுறன்முறைக்கு வழங்கிஞன்போஜனங்கள்
தாம்பூலபுஷ்பமுதல் தான்கொடுத்தார்வந்தவர்க்கு
பந்தல்சபைதனிலே வந்தவர்கள் முன்பாக

### சீதனச் சிறப்பு

கலியாணவாசலிலே என்னென்னசீதனங்கள்
என்னென்னசீதனங்கள் பெற்ருளிளங்கொடியாள்
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசாதே
பட்டிநிறைந்திருக்கும் பால்பசுவாஞ்சீதனங்கள்
ஏரிநிறைந்திருக்கும் எருமைமாடாஞ்சீதனங்கள்
காடுநிறைந்திருக்கும் கருப்பாடாஞ்சீதனங்கள்
மேட்டுக்கழனி முனைக்கழனிசீதனங்கள்
பள்ளக்கழனி பயிர்க்கழனிசீதனங்கள்
இத்தனைச்சீதனங்கள் பெற்ருளிளங்கொடியாள்
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசவேண்டாம்
வரிசைகள் இல்லையென்று வார்குழலேயேசவேண்டாம்
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
தோளுக்குத்தோளு துளசிமணிசீதனங்கள்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமைகளுடன்
கையிற்கரிபவளங் கனகமணிதாழ்வடங்கள்
மார்புசரப்பளியாம் வயிரமணிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்ருளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசாதே
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
உட்கட்டுத்தாலி யுருக்குமணிஆபரணமும்
உட்கார்ந்துமோர்கடைய முக்காலிபொன்னுலே
சார்ந்திருந்துமோர்கடைய சாருமணைபொன்னுலே
வடித்துப்பால்கறப்பதற்கு பிடிக்கயறும்பொன்னுலே



அணிந்திருந்துபால்கறக்க அணைக்கயிறும்பொன்னாலே
சார்ந்திருந்துமோர்கடைய சாறுமனை பொன்னாலே
அத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
ஆலாத்திபெண்களிலே அறுநூறுபெண்களுமாம்
பாக்குநறுக்கியிடும் பரிவாரமெத்தவுண்டு
வெற்றிலைச்சுருள்மடிக்கும் வெள்ளாட்டிப்பெண்களும்
தெற்குத்தெருநிறைந்த தென்னைமரஞ்சோலைகளாம்
வடக்குத்தெருநிறைந்த வாழைமரஞ்சோலைகளாம்
கிழக்குத்தெருநிறைந்த கிளாமரங்கள்சீதனமாம்
மேற்குத்தெருநிறைந்த விளாமரங்கள்சீதனமாம்
குத்துமுலக்கைகளும் கூடைமுறம்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்

## நல்லதங்காளும் காசிராஜனும் தங்கள் தேசம் போகுதல்

சீதனங்கள்தான்கொடுத்து சிறப்பாகநல்லதம்பி
தங்கைமுகம்பார்த்து தார்வேந்தனேதுரைப்பான்
ஏறுமம்மா தண்டிகையில் என்பிறவிநாயகமே
ஏறுமென்றுசொன்னவுட னிளங்கொடியும்கண்சிவந்து
அடித்துப்புரண்டழுதாள் ஆபரணமற்றுவிழ
முட்டியழுதாளே முத்துமணியற்றுவிழ
கட்டியழுதாளே கனகமணிசுழன்றுவிழ
தாவியழுதாளே தலையணைமெத்தையிலே
அப்போதுநல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஏண்டியம்மா தங்கையுனக் கித்தனைகோபமென்ன
மதுரையறுகாதம் வாழ்மதுரைமூக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமூக்காதம்
நீ-நினைத்தபிரகாரம் நான்வருவேன்தங்கையென்றான்
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
பூவால்குறைச்சலுண்டோ பொற்கொடியேநாயகமே
ஏறுமம்மா தண்டிகையில் என்பிறவிநாயகமே
நீயேறும்தண்டிகைக்கு முன்தண்டிதம்மதென்றான்
தோழியருமுன்னடக்க தொகைமயிலனைக்கு
பாங்கியர்கள்முன்னடக்க பாவையிளங்கொடிக்கு
பாவையர்கள்தானடக்க பத்தினியும்வழிகடந்தாள்
ஆளாளுஞ்சேவகரும் காவலரும்முன்னடக்க
கத்திகட்டுஞ்சேவர்கள் கன்னடியர்முன்னடக்க
ஈட்டிப்பிடிமன்னர் இருபுறமுஞ்சூழ்ந்துவர
யானையுஞ்சேனையும் அத்தனையுமுன்னடக்க
குதிரைபரிவாரம் கோடிதளம்பின்னடக்க



கட்டியங்கூறிவர கவிவாணர்பாடிவர
சிங்காரதேவதாசி தெருவில்நடனம்புரிய
ஊர்வசிரம்பையைப்போல் உலாவிநடனம்புரிய
புகுந்தாளரண்மனையில் புருஷனிணைபிரியாள்
எதிரொருவரில்லாமல் எல்லையரசாண்டிருந்தாள்
வாழும்பெருமைகளை வாக்குரைக்கக்கூடாது
வாழ்ந்திருக்கும்போதே மகாதேவர்தன்னருளால்
கிளிமொழிமாது கெர்ப்பமதுவுண்டாகி
ஏழுவருஷத்துக்குள் ஏழுபிள்ளைபெற்றெடுத்தாள்
பெற்றபிள்ளை நல்லதங்காள் பேருண்டாய்வாழ்ந்திருந்தாள்
வாழ்ந்திருக்கும்நாளையிலே வாழ்வரசிசீமையிலே

## நல்லதங்காளுக்குப் பஞ்சகாலம் வந்தது

பன்னிரண்டுவருஷமுமே பாரமழைபெய்யவில்லை
சிறுசம்பாபெருசம்பா சீரகச்சம்பாவரகு
கார்நெல்லுகுண்டுசம்பா கம்புதினைகேழ்வரகு
துவரை அவரைகொள்ளு சோளம்நவதானியமும்
நாட்டில்மழையுமில்லை நல்லவிளைவுமில்லை
தேசஞ்செழிப்புமில்லை செந்நெல்விளைவுமில்லை
இப்படியாகபஞ்சம் நேர்ந்ததிளக்கொடிக்கு
வாராதபஞ்சமென்ன வந்ததிளங்கொடிக்கு
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்திங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னரைத்தோற்றபஞ்சம்
நாழியுருண்டபஞ்சம் நாயகனைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்ட பஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்து தனிவழியேநின்றபஞ்சம்
கூறைபறிகொடுத்து கொழுநனைத்தோற்றபஞ்சம்
கணவனைப்பறிகொடுத்து கைக்குழந்தைவிற்றபஞ்சம்
இப்படியாகப்பஞ்சம் இளங்கொடிக்குவந்திருக்க
அப்பெரியபஞ்சத்திலே ஆரணங்கேதுசெய்வாள்
தாலிதவிரவைத்து தங்கமெல்லாம்விற்றுவுண்டாள்
மாலைதவிரவைத்து மற்றதெல்லாம்விற்றுவுண்டாள்
ஆலாத்திப்பெண்களிலே அறுநூறும்விற்றுவுண்டாள்
பாக்குநொறுக்கியிடும் பணிப்பெண்ணை விற்றுவுண்டாள்
வெற்றிலைசுருள்மடிக்கும் மெல்லியரைவிற்றுவுண்டாள்
மரங்கள்முதலானதும் வந்தமட்டும்விற்றுவுண்டாள்
குத்துமுலக்கைகளை கூடைமுறம்விற்றுவுண்டாள்
அண்ணனிடசீதனத்தை அத்தனையும்விற்றுவுண்டாள்
தமையனிடசீதனத்தை தவறாமல்விற்றுவுண்டாள்
தங்கப்பணிதியெல்லாம் தவிட்டுக்குவிற்றுவுண்டாள்

இத்தனையுந்தான்விற்று ஏழையாய்நின்றாளே
தங்கப்பொருள்வுண்டு தாங்கமுடியாமல்
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றாள்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றாள்
பொறுக்கமுடியாமல் பிறந்தவிடத்தேபோறேனென்றாள்
இப்படியாக இளங்கொடியாள் தானுரைத்தாள்
அப்போதுஆளன் ஆரணங்குக்கெடுத்துரைப்பான்
அடி-இப்போதுபோகிறது இனிதல்லவுத்தமியே
வாழ்ந்துகெட்டுப்போனாயானால் வலதுசிரிப்பாரோடி
கெட்டுநொந்துபோனாயானால் கிளையிலுஞ்சேர்க்காரோடி
கண்டார்சிரிப்பாரோடி காசினியோரேசிடுவார்
பார்த்தோர்நகைப்பாரோடி பாரிலுள்ளாரேசிடுவார்
உன்னொத்தநாயகிமார் உகந்துசிரிப்பாரோடி
வலதுக்கிடங்கொடாதே வார்குழலேநாயகமே
பொன்னே நவமணியே புனக்கிளியேசொல்கிறண்டி
ஆனாலும்பெண்மயிலே அருங்கிளியேசொல்கிறண்டி
தாலிகட்டிக்கொண்டமுதல் தனிவழியேபோனதில்லை
இப்போதுபோகிறது இனிதல்லவுத்தமியே
தண்டிக்குததண்டிபெண்ணே சரியாகவாழ்ந்தோமானால்
வாவென்றழைப்பார்கள் வகையுண்டாய்பேசுவார்கள்
கெட்டமகள்போனாயானால் கிழிந்ததடுக்கிடுவார்
வாழ்ந்தமகள்போனாயானால் வண்ணத்தடுக்கிடுவார்
இப்போதுபோவதுனக் கியல்பல்லவுத்தமியே
சாணியெடுத்தாகிலும் தட்டிப்பிழைப்போமடி
கூலியெடுத்தாகிலுங் கூடிப்பிழைப்போமடி
வேலிவிறகொடித்து விற்றுப்பிழைப்போமடி
இப்படியாகக்கணவன் எடுத்துரைக்கும்வேளையிலே

### நல்லதங்காள் புருஷன் சொல் தடுத்து தாய்வீடு செல்லல்

அப்போதுநல்லதங்காள் ஆளனுக்கேதுசொல்வாள்
பூமுடிக்குங்கூந்தலிலே புல்லெடுக்கக்காரணமோ
வேர்முடிக்குங்கூந்தலிலே விறகெடுக்கவென்னவிதியோ
சந்தனமிழைக்குங்கையால் சாணிதட்டக்காரணமோ
குங்குமமெடுக்குங்கையால் கூலிவேலைசெய்யலாமோ
ஆனைகட்டியெங்களண்ணன் குவலயத்தையாளுகிறான்
ஆளுகிறான்சீமையெல்லாம் அரண்மனையும்பேர்போக
என்-அண்ணனரண்மனைக்கு அரசாளப்போகிறேனென்
தமையனரண்மனைக்குத் தாய்வீடுபோறேனென்றாள்
அப்போதுஆளன் அரிவையருக்கேதுரைப்பான்



பேச்சுதனைக்கேளாமல் பெண்மயிலேபோறாயேல்
போறவிடந்தனிலே பிழைமோசம்வந்துவிடும்
என்றதைக்கேட்டு எடுத்துரைப்பாள்நல்லதங்காள்
புத்திரரைநான்வளர்த்து வருவேன்காண்புண்ணியரே
மைந்தரைநான்வளர்த்து வருவேன்காண்மன்னவரே
போய்பிழைத்துவாரேனெனப் பொற்கொடி நமஸ்கரித்தாள்
என்பேச்சுகேளாமல் ஏந்திழையேபோறாயோ
கொண்டவனார்வார்த்தை கோடுதவறாதே
ஆளன்சொல்தள்ளாதே அரும்பாவிசண்டாளி
புருஷன்சொல்தள்ளாதே பொல்லாதசண்டாளி
நீ-போனாலும்போறாயடி புத்திரர்பதனமடி
மைந்தர்களுக்குச்சேதம் வந்ததென்றுகேட்டேனானால்
நீ-ஈயாய்ப்பறந்தாலும் இருதுண்டாய்வெட்டிடுவேன்
காற்றாய்ப்பறந்தாலும் கண்டதுண்டஞ்செய்திடுவேன்
மக்கள்பதனமடி மங்கையரேநடவுமென்றான்
பிள்ளைபதனமடி பெண்ணேநடவுமென்றான்
அப்போதுநல்லதங்காள் ஆளனுக்குத்தெண்டனிட்டாள்
போய்வாரேனென்று புருஷனுக்குத்தெண்டனிட்டாள்
தோளிலொருபிள்ளைவைத்தாள் தோகைமயிலனையாள்
கக்கத்தில்பிள்ளைவைத்து கடுகவழிநடந்தாள்
முதுகின்மேல்பிள்ளைவைத்து மொய்குழலாள்தானடந்து
பத்தினியும்முன்னடக்க பத்தாவும்பின்னடக்க
இருவருமப்போது இசைந்துவழிநடந்து
பாப்பாரத்தெருகடந்து பாளையர்வீதிவந்தார்
வன்னித்தெருகடந்து வாழரசர்வீதிவந்தார்
செட்டித்தெருகடந்து சேணியனார்வீதிவந்தார்
வேளாளர்தெருகடந்து வேகமுடனாக
பலதெருவுந்தான்கடந்து பக்ஷமுடன்வாராளே
தேரோடும்வீதி தெருவீதிகோடியிலே

### நல்லதங்காளுக்கு அவசகுனம் நேரிடல்

கன்னிகழியாப்பெண் கையில்நெருப்பெடுத்தாள்
வாழாக்குமரியவள் மீளாநெருப்பெடுத்தாள்
வண்ணான்வெளுத்ததொரு புடவைகண்டாள்மங்கையரும்
வாணியன்கூடையல்லோ வரக்கண்டாள்மங்கையரும்
நரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானான்
சாரைக்குறுக்காச்சு சர்ப்பந்தடையாச்சு
காடையிடமாச்சு கருங்குறுமான்கட்டாச்சு
பூனைக்குறுக்காச்சு புதுப்பானைமுன்னாச்சு
அப்போதுதன்கணவ னரிவையர்க்கேதுசொல்வான்

ஆகாச்சகுனம்பெண்ணே அடியெடுத்துவைக்காதே
பொல்லா சகுனம்பெண்ணே போகாதேபெண்மயிலே
குட்டியிட்டநாகேந்திரன் குறுக்கேயிடமாச்சு
என்றுமவருரைக்க இயலான நல்லதங்காள்
ஆகாச்சகுனத்தை அறிந்துவரவேண்டுமென்றாள்
பொல்லாதசகுனத்தை போய்பார்க்கவேணுமென்றாள்
போய்பார்த்துவாரேனென்று பூவையந்தெண்டனிட்டாள்
பதிங்காதவழிதூரம் பத்தாவும்வழிவிட்டார்
மாதரைப்போகவிட்டு மன்னவனும்திரும்பிவிட்டார்
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குநடக்கலுற்றாள்
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனச்சாலைவிட்டு
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சம்வனந்தாண்டி
சுரைக்காய்காய்க்கும்வனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
கொஞ்சிபழுக்கும்வனம் கோவைபடரும்வனம்
சிங்கமுறங்குவனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
பேய் நுழையாகானகத்தே போய்புகுந்தாள் கட்டழகி
வழியுந்தெரியாமல் வகைதப்பிநின்றழுதாள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
பூமரத்தின்சோலையிலே பொற்கொடியும்வந்துநின்றாள்
மாமரத்தின்சோலையிலே மங்கையரும்போய்நடந்தாள்
மக்களைச்சூழவைத்து மங்கைபுலம்பலுற்றாள்
பிள்ளைகளைச்சூழவைத்து பெண்பெருமாளழுகலுற்றாள்
மாமரத்தின்சோலையிலே மங்கைபுலம்பலுற்றாள்
பிள்ளையழுகிறதும் பெண்ணாள் கலங்குறதும்
மக்களழுகிறதும் மங்கையழுகிறதும்
கன்னியழுகிறதும் காளைபுலம்புகிறதும்
மக்களழுகிறதை மாமரமும்பார்த்தழுமாம்
அத்துவானகானகத்தில் அழுதுபுலம்புகையில்
ஏழுபிள்ளை நல்லதங்காள் இருந்துபுலம்புகையில்
ஆணழகுமண்ணன் அண்ணன்நல்லதம்பி
ஆண்டிருக்குஞ்சீமையிலே அவனுடையமாளிகையில்

## நல்லதம்பி கனவு காண்கிறது

தூக்கம்வருகுதென்று தூங்குமஞ்சமெத்தையிலே
தங்கப்பொன்கட்டிலிலே தூங்குகின்றவேளையிலே
சொர்னப்பொன்கட்டிலிலே தூங்குகின்றவேளையிலே
மணையிற்பிறந்தபெண்ணாள் மாதுநல்லதம்பிறவி
தாலிதரித்துக்கொண்டு தன்புருஷன்வீடுசென்று
நாலாறுவருஷமது நலமாகவாழ்ந்திருந்து
ஏழுபிள்ளைபெற்றுமவள் இருக்கின்றவேளையிலே



பொல்லாதகாலமது சொல்லாமல்வந்ததுவாம்
பன்னிரண்டுவருஷம் பஞ்சம்வந்துநேர்ந்ததுவாம்
தாலிதவிரமற்ற தங்கமெல்லாமுண்டபஞ்சம்
மங்கிலியந்தான்தவிர மற்றதெல்லாமுண்டபஞ்சம்
தாங்கமுடியாமல் தாய்வீடுவருவதுமாய்
வழிகள்தெரியாமல் வனத்தில்புலம்புவதும்
காட்டிலேசத்தமிடக் காதிலேகேட்டதுபோல்
சொப்பனங்கண்டானே துரைமன்னன் நல்லதம்பி
ஒற்றைக்குரலுமென்ன ஒருத்தியுடசத்தமென்ன
அத்துவானகானகத்தில் அழுகிறாள்பெண்பெருமாள்
தூங்கியெழுந்திருந்தான் துயரக்கனாகண்டதுபோல்
அலறியெழுந்திருந்தான் அல்லல்கனாகண்டதுபோல்
ஓங்கியெழுந்திருந்தான் ஓங்காரக்கோபமுடன்

## நல்லதம்பி காட்டில் வேட்டைக்கு வந்து தங்கையைப் காணல்

கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைதானணிந்து
வாளுருவிதோளில்வைத்து மன்னனெழுந்திருந்தான்
கருநாயுஞ்சங்கிலியும் கைக்கேற்றஅம்புகளும்
முள்ளிட்டவேலியெல்லாம் முருக்கம்பூவில்லுகளும்
சன்னிட்ட நாயுடனே சகலகுலபாண்டியரும்
வெள்ளானைமேலெறி வேட்டைக்குவாரானங்கே
ஆனையின்மேலேறி அதிர்வேட்டைவாரானே
குதிரையின்மேலேறி குதிரைவேட்டைவாரானே
காட்டிலேவந்துமவன் கனவேட்டையாடையிலே
வேட்டைகளாடிக் களைக்குமந்தவேளையிலே
ஆனைகுதிரையெல்லாம் அங்கங்கேதானிறுத்தி
குதிரைபரிவாரம் கோடிதனந்தானிறுத்தி
ஆணழகன் நல்லதம்பி அதியவெடுத்துரைப்பான்
ஆரடாசேவகரே அர்க்கார்கள் தம்பியரே
அத்துவானகானகத்தில் ஆரோபுலம்புவது
ஆரோபுலம்புவது அறியவேணுமென்று
பூவையழுகிறதைப் போய்பார்க்கவேணுமென்று
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
கருநாயைக்கைகொடுத்தான் காவலரைப்போகவிட்டான்
செந்நாயைக்கைகொடுத்தான் சேவகரைப்போகவிட்டான்
அருளாளுமென்னையா அப்படியேநல்லதென்று
நல்லதம்பிதன்னுடனே நாலுபத்துசேவகர்கள்
ஆலாகுஞ்சேவகரும் அடுகெனவேயோடிவந்து
நல்லதங்காளருகில்வந்து நலமாகவேதுசொல்வார்

கானகத்தில்புலம்புகிற கட்டார்கருங்குழலே
வனத்தில்புலம்புகிற வனக்கிளியேநீயாரு
ஒண்டித்தனிமையாக ஒருமையாய்த்தானிருந்து
காட்டில்புலம்புகிற காரணத்தைச்சொல்லுமென்றார்

### சேவகர்கள் காட்டில் நல்லதங்காளைக் கண்டு அவர்கள் வரலாறு கேட்குதல்

எந்தவூர் தாயாரே எனக்கறியச்சொல்லுமென்றார்
காட்டிலேவந்துநீ கதறிப்புலம்புவதேன்
ஒண்டியாய்த்தானிருந்து ஓங்கியழுவதென்ன
வந்தவரலாற்றை வகையாய்ச்சொல்லுமென்றார்
அப்போதுநல்லதங்காள் அர்க்காருக்கெடுத்துரைப்பாள்
ஊர்களும்பேர்களும் உங்களுக்குச்சொல்லணுமா
குலங்களைக்கேட்டுஅண்ணே பெண்கொள்ளவந்தாயடா
என்பாடுசொல்லவென்றால் நிலப்பாடுசாயுமடா
என்பாடுசொன்னக்கால் எங்கும்நிலவெரிக்கும்
பெண்பாடுசொல்லவென்றால் பொழுதுவிடியுமண்ணே
என்றுசொல்லிநல்லதங்காள் எடுத்துரைத்தாள்சேவகர்க்கு
அப்போதுகாவலர்கள் அரிவையர்க்குக்கூறலுற்றார்
சொல்லுமம்மா தாயாரே செவிகொடுத்துகேட்போமென்றார்
அப்போதுசேவகர்க்கு ஆரணங்குகூறலுற்றாள்
ஐந்துபிராயமண்ணே அறியாதநாளையிலே
தாயுந்தகப்பனும் செத்துமடிந்தபோது
குடும்பிதலையுடனே கட்டிவிட்டமங்கிலியம்
பாவாடைகட்டவொண்ணு பதந்தெரியா நாளையிலே
சிற்றாடைகட்டவொண்ணு சீர்தெரியா நாளையிலே
கட்டிக்கொடுத்தாரண்ணே கடுகவந்தமன்னவர்க்கு
ஒப்பிக்கொடுத்தாரண்ணே உண்டானகாவலர்க்கு
தாலிதரித்தமுதல் தாய்வீடுபோனதில்லை
மாலையிட்டநாள்முதலாய் மற்றொருநாள்வந்ததில்லை
நான்போனநாள்முதலாய் நல்லமழையுமில்லை
பன்னிரண்டுவருஷமும் பாரமழையுமில்லை
நாற்பத்தொருவருஷம் நன்றாகவாழ்ந்திருந்தேன்
வாழும்பெருமையிலே மக்களைப்பெற்றெடுத்தேன்
ஏழுபேர்மக்களை இன்பமாய்ப்பெற்றெடுத்தேன்
பெற்றேனேமக்களைப் பேருண்டாய்வாழ்ந்திருந்தேன்
வளர்த்தேனேமக்களை வாழ்வுண்டாய்வாழ்ந்திருந்தேன்
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளைத்தோற்றபஞ்சம்



தாலிபறிகொடுத்து தனிவழியேநின்றபஞ்சம்
கூறைப்பறிகொடுத்துக் கொழுநனைத்தோற்றபஞ்சம்
தாலிதவிரவைத்துத் தங்கமெல்லாம்விற்றுவுண்டேன்
இத்தனையுமறிந்துகொண்டேன் இருக்கமுடியவில்லை
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றேன்
பொறுக்கமுடியாமல் பிறந்திடத்தேபோறேனென்றேன்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றேன்
என்றவுரைகேட்டு இயலானசேவகர்கள்
வந்ததேபோதுமம்மா மனக்கவலைதீர்ந்துவிடும்
சுகமாய்த்தாய்பேரைச் சொல்லுமம்மா ஆரணங்கே
உன்பேரை நாங்கள் கேட்க உத்தமியேசொல்லுமம்மா
அப்போதுநல்லதங்காள் அரிவையரும்கூறலுற்றாள்
தாய்பேருஇந்திராணி தகப்பன்பேருஇராமலிங்கம்
என்பேருநல்லதங்காள் என் அண்ணன்பேர்நல்லதம்பி
என்றுமவளுரைக்க இயலான நல்லதம்பி

### நல்லதம்பி நல்லதங்கையைக் கண்டு பரிதவித்தல்

ஆனைவிட்டுத்தானும் அண்ணன்குதித்திறங்கி
குதிரைவிட்டுத்தானும் கொப்பெனவேதானிறங்கி
கட்டியழுதானே கடலிறைத்தபாவனைபோல்
தாவியழுதானே தங்கைகுடிபதில்
கட்டியழுதமன்னன் களைதெளிந்தபிற்பாடு
கண்ணாட்டிபெற்றதெல்லாம் கால்நடையாய்வந்ததென்ன
கால்நடையாயிங்குவரக் காரணமோ என்பிறப்பே
ஆனையரிதாச்சோ ஆண்டிருந்தசீமையிலே
குதிரையரிதாச்சோ குடியிருந்தசீமையிலே
ஒட்டையரிதாச்சோ உன்னுடையசீமையிலே
பல்லக்குப்பஞ்சமோதான் பத்தினியாளேநிவர
பாங்கிமார்பஞ்சமோதான் பத்தினியேயுந்தனுக்கு
பாலால்குறைச்சலுண்டோபாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
எதனால்குறைச்சலம்மா என்பிறவிஇங்குவர
ஓலைகிடையாதோ உத்தமனார்சீமையிலே
ஓலையெழுதியல்லோ உத்தமியேயனுப்பிவைத்தால்
ஓலைகண்டநாழிகையில் ஓடிவந்துபாரேனோ
மதுரையரூகாதம் வாழ்மதுரைமுக்காதம்
நாடோடி நினைத்தபிரகாரம் நான்வருவேன்தங்கையரே
கால்நடையாயிங்குவரக் காரணமோஎன்பிறப்பே
என்பிறப்பேவீட்டுக்கு ஏகுமம்மா நான்வருவேன்
பிள்ளைவிளையாட புள்ளிமான்கொண்டுவாரேன்

மைந்தன்விளையாட மான்வேட்டையாடிவாரேன்
தென்னண்டைவாடையிலே தேங்காய்க்குவிந்திருக்கும்
வடவண்டைவாடையிலே மாங்காய்க்குவிந்திருக்கும்
பிள்ளையும்நீயுமாய்ப் போடியம்மா தங்கையரே
உன்னைக்கண்டவுடனவளுங் கடுகச்சமைத்திடுவாள்
வீட்டுக்குபோடியம்மா வேட்டையாடிவாரேனென்றார்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்

### நல்லதம்பி நல்லதங்காளை தன் வீட்டுக்கு அனுப்புதல்

அண்ணாவேஅண்ணாவே ஆணழகாசொல்லுகிறேன்
வாசலறியேனப்பா வளவுகுறிப்பறியேன்
கோயிலறியேனப்பா குறிப்பறியேன்கொற்றவனே
அடையாளஞ்சொல்லுமென்றா ளரிவையிளங்கொடியாள்
மூன்றுகதவிருக்கும் மொதாங்கிப்பூட்டிருக்கும்
புறக்கடைவாசலிலே பொன்னின்கதவிருக்கும்
தலைக்கடைவாசலிலே தங்கக்கதவிருக்கும்
நாலுகதவிருக்கும் நாதாங்கிப்பூட்டிருக்கும்
காராம்பசுவுமுண்டு கட்டழகுவாசலிலே
காட்டானைவாசலிலே கட்டியிருக்குதம்மா
அதுவேஅடையாளம் அம்மணியேபோவென்றான்
உத்தமியேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்
போடியம்மாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போதுநல்லதங்காள் அரிவையுமேதுசொல்வாள்
அண்ணாவேஅண்ணாவே ஆணழகாசொல்கிறேன்கேள்
மாதாயிருந்தாலும் வாவென்றுதானழைப்பாள்
தாயற்றபோதேயண்ணா தவமற்றுபோகலையோ
அப்பனற்றபோதேயண்ணா ஆதரவுபோகலையோ
மூளியலங்காரி முருகுழலாளண்ணியவள்
வாவென்றழைப்பாளோ வரிசையிட்டுப்பார்ப்பாளோ
ஏனென்றுகேட்பாளோ ஏறமுகம்பார்ப்பாளோ
அண்ணாருகிருந்தா லருமைகள்மெத்தவுண்டு
என்பிறப்பேநீயிருந்தால் எனக்குமெத்தசொந்தமுண்டு
நீயில்லாமாளிகையில் நான்போகலாகாது
அண்ணனில்லாவீட்டில் அடியெடுத்துவையேனென்றாள்
அந்தவுரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
தாயேயுனைவளர்த்த தாதியிருக்கலையோ
அண்ணனுடபெண்சாதி ஆத்தாளிருக்கலையோ
உடன்பிறப்பேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்
போடியம்மாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போதுநல்லதங்காள் அரிவைதுரிதமுடன்



நல்லதுயென்றுசொல்லி நடந்தாளே நாயகியாள்
காடுமலைதாண்டி கடுகவேநடக்கலுற்றாள்
பிள்ளைகளைப்பின்னடத்தி போகிறாள் நடுத்தெருவே
மைந்தர்களைப்பின்னடத்தி போகிறாள்கடைத்தெருவே

### மூளியலங்காரி நல்லதங்காள் வருவதைக் கண்டு தன் ஆபரணமெல்லாம் பத்திரப்படுத்தல்

அப்போதுநல்லதம்பி ஆணழகன்தேவியரும்
உப்பரிகைமீதேறி உலாவுகையில்கண்டுவிட்டாள்
கண்டாளேகண்டாளே கண்ணாட்டிநாத்தியரை
கண்டுயிடிவிழுந்தாள் கட்டாணியப்போது
பார்த்துயிடிவிழுந்தாள் பாவியந்தசண்டாளி
தாதிகளைமூப்பிகளைத் தந்திரமாய்த்தானழைத்து
ஆரடிதாதிகளே அரைக்ஷணத்தில்நீங்களிப்போ
தென்னண்டைமூலைதனில் தேரோடும்வீதியிலே
வடவண்டைவீதியிலே வருகிறவளாரடிதான்
வருகிறவளாரடிதான் மாதரேபாருமென்றாள்
அப்போதுதாதியர்க ளரிவையர்களோடிவந்து
தெருவீதிதன்னில்வந்து சேடியரும்பார்க்கலுற்றார்
பார்த்துமேயோடிவந்து பாவையர்களேதுரைப்பார்
மலையிற்பிறந்தபெண்ணா மகராசிவாராளம்மா
அப்போது-மூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
இவளிருக்குஞ்சீமையில் இக்காலங்கருப்புமுண்டு
நாளிருக்குஞ்சீமையிலே நாயகியேயேன்வருவாள்
சீமைகளைப்பூமிகளை சீர்கொள்ளவாராளோ
என்-வாழ்வைப்பறிக்கவல்லோ வாராளேசக்களத்தி
காடுகரைகளெல்லாம் கைக்கொள்ளவாராளோடி
என்குடிக்குத்தீம்புவைக்க எங்கிருந்துவாராளோடி
பொன்னாபரணமெல்லாம் போட்டழிக்கவாராளோடி
தங்கப்பணிதியெல்லாம் தான்தரிக்கவாராளோடி
தென்னண்டைக்கண்டீரானால் தெருக்கதவைச்சாத்திவிடு
வடவண்டைக்கண்டீரானால் வலக்கதவைச்சாத்திவிடு
மூளியலங்காரி மூதேவிசொற்படிக்கு
தாதிகளப்போது சாத்திக்கதவடைத்தார்
இறுக்கிக்கதவடைத்தார் ஈரமண்போட்டடைத்தார்
பானையில்சாதமெல்லாம் பதனப்படுத்திவிட்டார்
மூளியலங்காரி மூதேவியேதுசொல்வாள்
பட்டைக்கழற்றிவைத்தாள் பாடகத்தைவாங்கிவைத்தாள்
சேலைகளைந்துமவள் சிறுவாணப்பெட்டியில்வைத்தாள்
இட்டபணிதியெல்லாம் பெட்டியில்கழற்றிவைத்தாள்

பழந்துணிகந்தைகளை பாவியவள்கட்டிக்கொண்டாள்
முகத்திலேபற்றுமிட்டு தரையிலேபள்ளிகொண்டாள்
வாசற்படியெதிரே மங்கையரும்பள்ளிகொண்டாள்

## நல்லதங்காள் அண்ணன் வீடு சேர்தல்

அப்போதுநல்லதங்காள் அரிவையிளங்கொடியும்
நாத்தனூர் தன்மனையில் நாயகியும்வந்துநின்று
கதவையுந்தட்டியவள் காரிழைநாயகியும்
நின்றாளொருஜாமம் நேரிழையாளப்போது
தான்-பேசாதஅண்ணியுடன் பேசவேவேண்டுமென்று
அப்போதுநல்லதங்காள் அரிவையிளங்கொடியும்
அண்ணியரேஅண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனரண்மனையை ஆளவந்தமதனியரே
அடி-காலுங்கடுக்குதண்ணி கச்சட்டைநோகுதண்ணி
நின்றகால்சோருதண்ணி நிலையுங்கடுக்குதண்ணி
கதவைத்திறவாயோ கண்ணாட்டியண்ணியரே
என்றுமவள்கூறி இளங்கொடியாள்நிற்கையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எண்ணாதஎண்ணம் எண்ணியவள்பள்ளிக்கொண்டாள்
ஏழுபிள்ளைபெற்றவள் இளங்கொடியாளேதுசெய்தாள்
கதவருகில்வந்துநின்று கடவுளைக்கைதொழுது
அண்ணி-பத்தறையுங்கட்டியே பாங்காய்வளர்த்தபிள்ளை
எட்டறையுங்கட்டியல்லோ இயல்பாய்வளர்த்தபிள்ளை
பாலமுதுசோறுசெ[illegible] பாங்கிட்டுநான்வளர்த்தேன்
நெய்யமுதுசோறுசெ[illegible]து நேர்த்தியாய்வளர்த்தபிள்ளை
கத்தரிக்காய்போலேயண்ணி கருகுதடிபாலரெல்லாம்
வெள்ளரிக்காய்ப்போலேயண்ணி வெம்புதடிபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதடிமக்களெல்லாம்
புத்திரர்பசியாறப் புத்திகளைச்சொல்லுமண்ணி
மனதுயிரங்கலையோ மாபாவியண்ணியென்றாள்
இறங்குந்திருமுகத்தை ஏரெடுத்துப்பார்க்கவில்லை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மைந்தர்பசியாற வார்த்தைகளைச்சொல்லுமண்ணி
என்னைப்பார்க்காவிட்டாலென்பிள்ளைகளைப்பாருமண்ணி
மூத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லுமண்ணி
வாயைத்திறந்தாக்கால் வாய்முத்துசிந்துமோடி
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோடி
தங்கமுதிர்ந்துமண்ணி தடுமாறிப்போராயடி
எந்நேரமட்டுமண்ணி இதம்பாடிநிற்பேனான்
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோதான்



வாயைத்திறந்துநீயும் மறுவார்த்தைசொல்லுமண்ணி
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இறங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
கவிழ்ந்ததிருமுகத்தைக்கண்ணெடுத்துப்பார்க்கவில்லை

## நல்லதங்காள் சாபத்தால் கதவு திறக்கப்பட்டது

அப்போதுநல்லதங்காள் ஆரணங்குஏதுசெய்தாள்
பத்தினியும்நானானால் பார்த்தாவுமவரானால்
உத்தமியும்நானானால் ஒருநூல்கழுத்தியானால்
தாள்பூட்டுசங்கிலியுந் தானேதிறக்கவேண்டும்
தானேதிறக்கவேண்டும் தாய்வீட்டுப்பொற்கதவு
பத்தினியாள்வாக்கு பலித்ததுதானப்போது
பத்தினியாள் சொல்லினிலே பளிச்செனத்திறந்திடுமாம்
உத்தமியாள் சொல்லையிலே ஓரடித்திறந்திடுமாம்
உட்கட்டுகதவுகள் தானேதிறந்ததப்பா
கதவுதிறந்தவுடன் கட்டழகிநல்லதங்காள்
முன்வைத்தகாலையங்கே பின்வைத்துத்தானுழைந்தாள்
ஆக்குமடப்பளியும் அடங்கலும்சுற்றிவந்தாள்
எங்கேசுற்றிபார்த்தாலும் ஏதொருபண்டமில்லை
மூளியலங்காரி மூதேவிவீற்றிருக்கும்
கூடத்திலேகனிகள் கொட்டியிருக்குதங்கே
அண்ணியர்க்குமுன்வந்து அருங்கிளியாள்நிற்கையிலே
பெருமையாய்நல்லதங்காள் பெற்றெடுத்தபிள்ளைகளில்
அதிலேஒருபிள்ளை அக்கனியிலொன்றெடுக்க
மற்றுமொருபிள்ளை மாங்காயெடுத்திடுமாம்
தென்னண்டையோடி தேங்காயெடுத்திடுமாம்
அப்போதுகண்டாளே அண்ணனுடதேவியரும்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
திட்டென்றெழுந்திருந்து தீவிரமாய்க்கைமுறித்தாள்
ஓட்டமாய்ஓடிவந்து ஓரறைதான்கொடுத்தாள்
மாங்காயைத்தான்திருகி மாங்காயுடன்போட்டாள்
தேங்காயைத்தான்திருகி தேங்காயுடன் போட்டாள்
ஆயிரந்தேங்காயிலே அழுகல்காய்கைகொடுத்தாள்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைத்தாள்
கண்ணான்பெற்றெடுத்த கற்கண்டேசர்க்கரையே
என்கொழுநன்பெற்றெடுத்த இந்திரசிகாமணியே
காலமழையில்லாமல் கழனிவிளையாமல்
தேதிமழையில்லாமல் செந்நெல்விளையாமல்
பயிர்கள்விளையாமல் பஞ்சங்கள்வந்ததினால்
பத்தாசொற்கேளாமல் படுபாவிசீமைவந்தேன்





மாமனதுமாளிகையில் மாங்காயைத்தின்னாதீர்
தேங்காயைத்தின்னாதீர் சிறுவரென்மைந்தர்களே
மாங்காயுந்தேங்காயும் மக்களேதின்னாதீர்
வாருங்கள்மக்களென்று மடியிலேதூக்கிவைத்தாள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதங்காள் தனக்கும் நாயகியாள்பிள்ளைகட்கும்
பன்னிரண்டுவருஷம் பஞ்சடைந்தகேழ்வரகை
சில்லியைந்துபானையிலே இல்லையென்றுவைத்தாள்
ஓட்டைத்திருகையெடுத் தொன்றிரண்டாய்மாவாக்கி
வாசலிலேநிற்குமந்த வாழைமரந்தான்பிளந்து
ஈனாதவாழை யிளவாழைத்தண்டொடித்து
வாழைமரம்பிளந்து வைத்தாளடுப்பிலேதான்
ஊதுகிறாள்பாவி ஒருவாய்ப்புகைகிளம்ப
சிந்தினாள்மூக்கையங்கே திருக்கண்சிவந்திடவே
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குகூறலுற்றாள்
நம்முடையஅண்ணனிக்கு நம்மால்வருத்தமென்ன
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தவருத்தங்கள் இப்படியாய்நேர்வதென்ன
என்றுசொல்லிநல்லதங்காள் எடுத்துரைத்தாளக்கினிக்கு
நான்-பத்தினியுமானால் பற்றியெரியவேண்டும்
உத்தமியுமானால் ஓங்கியெரியவேண்டும்
கூழுங்கொதிக்கவேண்டும் குழந்தைகள்பசியாறவேண்டும்
என்று-பத்தினியாள்சொல்கையிலே பற்றியெரியுதங்கே
கொம்பனையாள்சொல்கையிலே கூழுங்கொதித்திடுமாம்
அப்போதுநல்லதங்கா ளண்ணியருக்கேதுரைப்பாள்
காய்கிறகூழானாலும் கட்டழகிவார்க்காயோ
கொதிக்கிறகூழதனைக் கொடுப்பாயோமதனியென்றாள்
அப்போ-மூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
ஒருபிறைகண்டேனால் தரையிலிறக்குவண்டி
மாசிபிறைகண்டேனால் மாதேயிறக்குவண்டி
முப்பிறைகண்டேனால் மூன்றாலிறக்குவண்டி
மைந்தர்க்குமுந்தனுக்கும் வார்ப்பேண்டிகூழதனை
இருந்தாலிருவென்றாள் நடந்தால்நடவுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகுள்ளநல்லதங்காள்
மங்கைமனதுநொந்து மதிமுகம்வேறுபட்டு
உள்ளமனமெரிய உத்தமியாளேதுசொல்வாள்
குழந்தைகுடிக்கக்கொஞ்சம் கூழுக்குப்பஞ்சமோதான்
மக்கள்குடிக்கக்கூழு மண்டலத்திற்கிட்டாதோ
இக்கட்டுறப்பட்டால் எங்கேயும்கிட்டாதோ
வாங்களடாமக்களேவரிசையா யென்பிறகே

வைத்துவிளையாட மச்சினியார்மெத்தவுண்டு
கூடிவிளையாட குழந்தைமார்மெத்தவுண்டு
ஒப்பாரியுறன்முறையா ருண்டுபலபேர்கள்
பாட்டன்வீடுபோய்நாம் பாலமிர்தமுண்ணலாமே
தாய்வீடுபோனாலும் தயிர்சாதமுண்ணலாமே
அண்ணன்வீடுபோனாலும் ஆலித்திருக்கலாமே
வாங்களடாமக்களே வரிசையாயென்பிறகே
அண்டைவீட்டுப்பெண்டுகளா அசலாத்துஅப்பியரே
தண்ணீர்க்குப்போறதொரு தாய்மாரேபெண்டுகளா
என்-அண்ணியர்செய்ததொரு அனியாயங்கேட்டீர்களா
மதனியார்செய்ததொரு மரியாதைபார்த்தீர்களா
அண்ணனார்வந்தபின்பு அறிந்ததைசொல்லுமென்ருள்
தமையனார்வந்தபின்பு தாய்மாரேசொல்லுமென்ருள்
அந்தசொற்கேட்டிருந்த அரிவைமாரெல்லோரும்
நல்லதங்காளைபார்த்து நயமாகயேதுசொல்வார்
எந்தனிடவீட்டுக் கெழுந்துவா நல்லதங்காள்
அவரவர்கள் தன்வீட்டுக் கழைத்தார்களெல்லோரும்
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைகோபமென்ன
பச்சரிசிகுத்தித்தாரோம் பாலுங்கறந்துதாரோம்
பாலரும்நீயுமாய்ப் பசியாறிப்போங்களென்ருர்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
அண்டைவீட்டுத்தண்ணீர் யாம்குடியோம் அப்பியரே
அசல்வீட்டுத்தண்ணீர் யாமருந்தோம்அப்பியரே
அண்ணனார்வந்தபின்பு அருஞ்சேதிசொல்லுமென்ருள்
அப்போது பெண்களெல்லா மதிகமாயெடுத்துரைப்பார்
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைகோபமென்ன

### நல்லதங்காள் காட்டுக்குப் போகும்போது கணையாழி மோதிரமும் ஆவாரந்தழையையும் அடையாளமாகப் போட்டுவைத்தல்

கோபம்பொறுக்காமல் கொல்லைவழிதானடந்தாள்
ஆவாரம்செடியொடித்து அடையாளம்போடலுற்ருள்
கொன்றைதழையொடுத்து கொடிவழியேபோடலுற்ருள்
கணையாழிமோதிரத்தை கழற்றியேபோடலுற்ருள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
காட்டானைவனத்திலே கன்னிநடக்கலுற்ருள்
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
பாட்டனார்வைத்ததொரு பழஞ்சோலைபார்த்தழுதாள்
ஆத்தாளும்வைத்ததொரு அழகுசோலைபார்த்தழுதாள்
குடங்கொண்டுநீர்சொரிந்தேன் கொம்புகளாயிப்போது



பாவிவருவேனென்று பாலைப்பூகாய்த்தீர்களோ
தோஷிவருவேனென்று துக்கமுற்றுக்காய்த்தீர்களோ
வாருங்கள்மக்களா வரிசையாயென்பிறகே
என்றுசொல்லிநல்லதங்காள் இயலாயுரைக்கையிலே
தண்ணீரென்றுசொல்லி தவிக்கிருர்பாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுருர்பாலரெல்லாம்
காரைப்பழம்பறித்து கொடுத்தாளேமக்களுக்கு
சூரைப்பழம்பறித்து இட்டாளேமக்களுக்கு
தொரட்டுப்பழம்பறித்து தூங்காதீர்மக்களென்ருள்
கானலுரைக்குதென்று கையால்குடைபிடித்தாள்
என்னருமைமக்களா என்பிறகேவாருமென்ருள்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகையிலே
அப்போதுநல்லதங்கா ளரிவையுமெண்ணலுற்ருள்
உற்றுநினைத்தாளே ஒருகோடியோசனையை
பர்த்தாவின்வார்த்தைதள்ளி பதறிநடந்தோமே
கணவனிடவார்த்தையது கடந்துநடந்தோமே
எங்கேபோவானம் இடித்ததென்றுதானிருந்தேன்
நப்பாதேவானம் தலையிலிடித்ததென்ருள்
ஆகாயவானமது அதிரவிழுந்ததுவே
எண்ணறவாசித்து எழுந்தறக்கற்ருலும்
பெண்புத்தியாலேயல்லோ பிழைவந்துநேர்ந்ததென்ருள்
சதிகாரப்பாவியைநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
பழிகார அண்ணனைநான்பலமென்றுநம்பிவந்தேன்
இந்தவுடலோடேநாம் இனியிருப்போமானல்
பலருஞ்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
சதுரோர்சிரிப்பார்கள் சரியொத்தோரேசுவார்கள்
இந்தவுடலோடேநாம் இனியிருக்கலாகாது
மாண்டுமடிவோமென்று மங்கைமனந்தளர்ந்து
செத்துமடிவோமென்று சேயிழையாள்மனந்துணிந்தாள்
வாங்களடாமக்களே வரிசையாயென்பிறகே
என்று சொல்லிநல்லதங்கா ளியலாகவழிநடந்தாள்
அவள்-அந்தவனந்தாண்டி அப்புறத்தேபோகலுற்ருள்
வேறேயொருகானகத்தில் மெல்லியரும்வந்துநின்ருள்
கானகத்தில்பலசிறுவர் காராவைமேய்த்திருந்தார்
மாடுமேய்க்கும்பிள்ளைகட்கு மகராசியேதுசொல்வாள்

### நல்லதங்காள் இடையரைப் பாழுங்கிணறிருக்குமிடம் கேட்டல்

மாடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாஞ்சிறுதம்பியரே
ஆடுமேய்க்கும்பிள்ளைகளா அறியாதபாலகரே
பச்சரிசிநான்தாரேன் பால்தாரேனுங்களுக்கு

கச்சாயம்நான்தாரேன் கண்ணுட்டிமக்களென்றாள்
பாழுங்கிணறென்று பார்க்கிலையோ தம்பிமாரே
இருண்டகிணறென்று காண்கிலையோ யெந்தனுக்கு
அப்போதுமாட்டிடைய ரறிவாளரேதுசொல்வார்
பாழுங்கிணறுனக்கேன் பத்தினியேசொல்லுமென்றார்
இருண்டகிணறுனக்கேன் என்தாயேசொல்லுமென்றார்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
தண்ணீரின்தாகமப்பா தற்காலமிப்போது
தண்ணீர்குடிக்கவேணும் தாகவிடாய்தீரவேணும்
கட்டமுதுண்ணவேணும் களையாறவேண்டுமென்றாள்
அப்போதுஆட்டிடைய ரரிவையர்க்கேதுசொல்வார்
அறுகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ளபாழ்கிணறு
கோவைபடர்ந்திருக்கும் கொடிதானபாழ்கிணறு
எதிரேயிருக்குதம்மா ஏற்றமுள்ள பாழ்கிணறு
என்றுமேசொன்னபின்பு ஏந்திழைநல்லதங்காள்
அந்தவிடந்தாண்டி அரிவையும்வாராளே
பாழுங்கிணற்றருகே பத்தினியாள்வந்துநின்று
இருண்டகிணற்றருகே இளங்கொடியாள்வந்துநின்று
மைந்தரைப்பார்த்துமல்லோ மங்கையருமேதுரைப்பாள்
பாழுங்கிணற்றைப்பார்த்து பாலகரே உமைப்பயந்து
இருண்டகிணற்றிற்றள்ள எடுத்துவளர்த்திட்டேனே
மாளவேயிங்குவந்தோம் மாபாவிபட்டணத்தில்
மன்னரவர்கேட்டுவிட்டால் மாண்டுமடிந்திடுவார்
கொற்றவர்கேட்டாக்கால் கூடமடிந்திடுவார்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
அண்ணன்கொடுத்ததொரு பட்டாடைமடித்துவைத்தாள்
அண்ணிகொடுத்ததொரு தேங்காயைமேலேவைத்தாள்
பாலூட்டும்பாலடையை பத்தினியாளங்கேவைத்தாள்
மோர்குடிக்கும்பாத்திரத்தை முருகுழலாளங்கேவைத்தாள்
தாமரையிலைகள்கிள்ளித் தாவிகமுறநிவைத்தாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையுமேதுசொல்வாள்
மங்கியெப்பிங்விடத்தில் மலையாய்ச்சமைக்கவேண்டும்
ஓங்கிவளரவேண்டும் ஒருகல்லாய்ச் சமைக்கவேண்டும்
கானகத்திலேவளர்ந்து கல்லாய்ச் சமைக்கவேண்டும்
பத்தினியாள்சொல்லையிலே பாராங்கல்லாகினதாம்
உத்தமியாள்சொல்லையிலே ஒருகல்லாய்நின்றதங்கே

## நல்லதங்காளும் பிள்ளைகளும் கிணற்றில் விழுந்திறத்தல்

அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
மாளுகிறேனென்றுசொல்லி மலையேறிதெண்டனிட்டாள்



சந்திவலம்வந்து சூரியனைதெண்டனிட்டாள்
தெண்டனிட்டபிற்பாடு தெரிவையிளங்கொடியும்
ஒவ்வொருமக்களாய் தள்ளினாள்கங்கையிலே
ஏழுபிள்ளை ஒருபெண்ணை அடுக்கடுக்காகத்தள்ளிவிட்
அப்போ - தாய்க்குதலைமகனும் தானுகவோடினனும் [டாள்
ஓடிய தலைமகனும் உத்தமிக்கேதுரைப்பான்
அம்மையே நீ நல்லதங்காள் தயவாகக்கேளுமம்மா
தப்பிப்பிழைத்திடுவேன் தாயார்பேர்சொல்லுகிறேன்
ஓடிப்பிழைத்திடுவேன் உன்பேரைச்சொல்லுகிறேன்
என்றுந்தண்ணீருமது இரைத்துவருவேனம்மா
திங்கள் திவசங்கள் பண்ணிவருவேனம்மா
என்னைத்தான்கொல்லாதே என்னைப்பெற்றமாதாவே
ஏழுபிள்ளைபெற்று உலகத்தையாளலையோ
ஏழுபிள்ளைபெற்றுமல்லோ ஏழைமதியானுயம்மா
மாடுமேய்த்துக்கஞ்சி குடிப்பேன்மாதாவே
என்னைத்தான்கொல்லவேண்டாம் என்னைப்பெற்றமாதா
போனதெல்லாம்போகட்டும் இருவர்பிழைத்திடுவோம் [வே
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
அறுவர்தன்னுயிர்க்கும் அதிகமோ நம்முயிர்தான்
நாம் - ஓடிப்பிழைத்தாலும் ஒருவரில்லையென்பார்கள்
தப்பிப்பிழைத்தாலும் தாயற்றபிள்ளையென்பார்
கண்டோர்சிரிப்பார்கள் காசினியோரேசுவார்கள்
பார்த்தோர்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
வைரத்தோர்சிரிப்பார்கள் வாயுள்ளோரேசுவார்கள்
வாடாயப்பாவென்மகனே கூடயிறந்திடுவோம்
என்றுமேநல்லதங்கா ளிடையரைத்தானமைத்து
கூடிப்பிடியுமென்றாள் கொற்றவனார்தன்மகனை
ஓடிப்பிடியுமென்றாள் உத்தமனார்தன்மகனை
கொச்சியிடையரெல்லாம் கூடிப்பிடித்துவந்தார்
வந்தோர்பிள்ளைதன்னை தள்ளினாள்கங்கையிலே
தள்ளினபிற்பாடு தனியாகநல்லதங்காள்
பாரிப்பாருடையுடுத்திப் பத்தினியாள்நல்லதங்காள்
தாறுஞ்சலியாமல் தண்ணீரில்போய்விழுந்தாள்
அப்போதுகங்காதேவி மூன்றுபிழைபொறுத்தாள்
மூன்றுபிழைபொறுத்து மூக்காலும்பொங்கிவிட்டாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
தண்ணீர்தவைக்கனைப்போல் தானுய்மிதக்கலுற்றாள்
பச்சைக்கிளிபோல் பறக்கிறாள்பாழ்கிணற்றில்
அவளுடையகூந்தலது அறுபதுபாகமது
அறுபதுபாகக்கூந்தல் அலையுதுகங்கையிலே
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

வேட்டைக்குப்போயிருந்த விருதுள்ளராஜனுக்கு
தோள்கள்துடிக்கிறதும் துற்குறிநேருவதும்
இயலானகண்களுக்கு ஈவந்துடிக்கிறதும்
ஆடுந்தொடைகளெல்லாம் அப்போதுடிக்கிறதும்
பட்டத்துயானையங்கே பதறிக்கவிழ்ந்திடுமாம்
யானையுஞ்சேனையும் அத்தனையுந்தான்மடிந்து
குதிரைபரிவாரம் கோடிதளம்தானிறந்து
இப்படியாக இடறுகள்நேர்ந்ததங்கே
ஒற்றைநாய்தன்னுடனே உளம்நைந்துவீடுசேர்ந்தான்

### மூளியலங்காரி தன் கணவனுக்கு கள்ள உபசரணை செய்தல்

அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
பத்தாவுக்குபசரணை பைங்கிளியும்செய்யலுற்றாள்
கெண்டியில்தண்ணீரும் கொண்டுவந்தாள் பன்னீரும்
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
சரணஞ்சரணமென்று சாய்த்தாள்திருமுடியை
பாதஞ்சரணமென்று பர்த்தாவைதெண்டனிட்டாள்
தண்ணீர்குடியும்பத்தா தாகவிடாய்தீரும்பத்தா
வெந்நீர்குடியும்பத்தா விடாயாற்றிக்கொள்ளுமென்றாள்
அப்போதுநல்லதம்பி அவளுக்கெடுத்துரைப்பான்
மூளியலங்காரி மூதேவிக்கெடுத்துரைப்பான்
தண்ணீர்குடிப்பேண்டி தாகவிடாயாற்றிக்கொள்வேன்
நல்லதென்னுடன்பிறந்த நல்லதங்காள்நாயகியை
காட்டிலேகண்டுபெண்ணே வீட்டுக்குஅனுப்பிவைத்தேன்
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவந்தா ளெங்கேயென்றான்
என்பிறப்புநல்லதங்கா ளிங்குவந்தா ளெங்கேயென்றான்
என்றுரைக்கநல்லதம்பி எடுத்துரைப்பாள்நாயகியாள்
கண்டதுகண்டாற்போல் கணவர்க்கெடுத்துரைப்பாள்
வந்திருந்தாள்பத்தா வண்ணப்பாய்போட்டேன்பத்தா
மக்களுடன்வந்த வரவைக்கண்டுநானுமப்போ
கால்கண்டநேரத்திலே கடுகவுலையும்வைத்தேன்
முனையறிவாப்பச்சரிசிதனை மலைபோல்நான்சமைத்தேன்
வாழைக்காய்கொய்தேன் வழுதலங்காய்தாம்பறித்தேன்
ஈரப்பலாக்காயை இருமுள்ளும்போக்கடித்தேன்
கத்தரிக்காய்கொய்தேன் கருணைக்குழம்புவைத்தேன்
முள்ளிக்காய்கொய்தேன் முருங்கைக்காய்நான்சமைத்தேன்
பச்சென்றகீரையொன்று பசுவெண்ணெய்போல்சமைத்தேன்
பத்துவிதக்கறியும் பாங்கானபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்



அடுக்கடுக்காய்கறிக ளன்பாகநான்சமைத்தேன்
உன்னுடன்தான்பிறந்த உத்தமியாள்நாயகிக்கும்
ஏழுபிள்ளைதனக்கும் இளங்கொடியாள்நாயகிக்கும்
பெரியகலமெடுத்தேன் பிள்ளைகட்குசோறுமிட்டேன்
சின்னகலமெடுத்தேன் சிற்றடிக்குச்சோறுமிட்டேன்
சத்திக்கறியும்வைத்து சொம்புதயிர்முன்னேவைத்தேன்
அள்ளிப்பருப்புமிட்டு அதுகண்டநெய்சொரித்தேன்
உண்ணுங்களென்றுசொல்லி உபசரணைசெய்துநின்றேன்
தின்னுங்களென்றுசொல்லி தெருவாசல்காத்துநின்றேன்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
உண்டுபசியாறி உட்கட்டிலில் வீற்றிருந்தாள்
அரிசிளவும்வெற்றிலையும் அள்ளியேநான்கொடுத்தேன்
தாம்பூலம்தான்தரித்து தயவாகநல்லதங்காள்
சொக்கட்டான்சதுரங்கந் தோகையருந்தானுடி
காற்றடிக்கும்மண்டபத்தில் காரிழையாள் வீற்றிருந்தாள்
தூக்கம்வருகுதென்றாள் துன்னிலங்கண்ணாளும்
பாங்கியரைத்தானழைத்து பள்ளியறைசோடியென்றேன்
நாமக்குழல்குழலார் தாதியர்களோடிவந்து
பொன்னைப்பொன்கட்டிவிட்டுச்சோடித்தார் தாதியர்கள்
தங்கப்பொன்கட்டிலின்மேல் தகுந்தமல்லிகைப்பூசொரித்
பனிக்குளிர்மண்டபத்தில் பாங்கிமார்விரித்துதறி [தார்
மெத்தையுடனடிகையும்பூமடலும் கொண்டுவந்துகொடுத்தார்கள்
பள்ளிகொள்ளுமென்று பாவையர்க்குத்தெண்டனிட்டேன்
அப்போதுநல்லதங்கா ளரிவையெழுந்திருந்து
பஞ்சணைமெத்தையிலே பள்ளிகொண்டாள்பாவையரும்
சாமரணிக்கவரி சந்தனத்தாலூதுவத்தி
வீசினார்தாதியர்கள் மெல்லியர்க்கிருபுறமும்
கவரிவிசிறமாறக் கட்டழகிதூங்கினளே
தூங்கினாள்மூன்றுசாமம் துன்னிலங்கண்ணாளும்
பொழுதுசரிந்ததென்று பொற்கொடியைநானெழுப்ப
தூக்கம்தெளிந்து இரிதழுடன் நல்லதங்காள்
என்னிடமேயுதானேக்கி இளங்கொடியாளேதுசொல்வாள்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணன்மனையை ஆளவந்தமதனியரே
மதனியரே நாத்தினரே நலமாகயென்தனுக்கு
ஒருசேலைசேலையொன்று உத்தமியாள்தான்கேட்டாள்
அப்போதுநானும் அரிவையிளங்கொடிக்கு
பணக்கொருசேலையென இருசேலைநான்கொடுத்தேன்
முத்துவைரமணிசேலையது மூன்றெடுத்துநான்கொடுத்தேன்
பச்சைவைரமணிசேலையது பத்தாவேதான்கொடுத்தேன்
நகைநட்டுமணிகொடுத்தேன் ஆபரணந்தான்கொடுத்தேன்.

தங்கமணிகொடுத்தேன் தகுந்தபொருள்கொடுத்தேன்
செலவுக்கோராயிரம்பொன் சிறப்பாகநான்கொடுத்தேன்
பாலர்விளையாட பம்பரங்கள் நான்கொடுத்தேன்
சிறுவர்விளையாட சிங்காரத்தேர்கொடுத்தேன்
மாமிவீடுபோவதற்கு மச்சுரதம்கேட்டாள்
ஆனைவீடுபோவதற்கு அழகுரதங்கேட்டாள்
அத்தனையும்நான்கொடுத்தேன் அன்பானநாத்தியர்க்கு
கேட்டதெல்லாம்நான்கொடுத்தேன் அன்பானநாத்தியர்க்கு
பாவையிளங்கொடியாள் பத்தினியாள்பாலரெல்லாம்
பாப்பாரவீதியெல்லாம் பந்தாடிவந்தார்கள்
செட்டித்தெருவெல்லாம் செண்டாடிவந்தார்கள்
நீ-கனைத்துவருவாயென்று கடுகக்குடமெடுத்தேன்
தங்கக்குட மெடுத்து தண்ணீர்க்குப்போயிருந்தேன்
அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
இருந்தாளெழுந்திருந்தா ளின்னவிடம்நானறியேன்
போனவிடம்நானறியேன் போயிருக்குந்தாவறியேன்
அப்போ-பந்தம்பிடித்துப்பத்தா பலதெருவுந்தேடிவந்து
காடெல்லாம்தேடிவந்தேன் காலிரண்டும்நோகுதிப்போ
ஊரெல்லாம்தேடிவந்தேன் உடம்பெல்லாம்நோகுதிப்போ
ஆளுலழகுமன்னு ஆளனேயெந்தனுக்கு
ஒருபானைஜலம்வைத்து தருவாயோயெந்தனுக்கு
என்றுசொல்லக்கேட்டமன்னன் இயலானநல்லதம்பி
ஆங்காரக்கோபமுடன் ஆனந்தவாழ்மார்பன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தமர்மமெல்லாம் எனக்குத்தெரியவரும்
என்பிறவிநல்லதங்கா ளெங்கேதான்போனாளிப்போ
நீ-இத்தனைசெய்திருந்தால் ஏன்போறாளென்பிறவி
நான்-அறிவேன் அறிவேனுன் னுசாரவார்த்தையெல்லாம்
உன்-காருடவித்தையெல்லாம் கண்டறிவேனிப்போது
போதுமடியிவ்வார்த்தை பொற்கொடியேகட்டிவையும்
இவ்வளவுசெய்திருந்தா ளேன்போருள் நல்லதங்காள்
கொஞ்சிவுபசாரம் கூறவந்தாயெந்தனுக்கு
கள்ளவுபசாரம் காட்டவந்தாயெந்தனுக்கு
என்பிறவிநல்லதங்கா ளெழுந்துபோனவழியறியேன்
என்றுசொல்லித்தானெழுந்தான் இயலானநல்லதம்பி
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தேரோடும்வீதி தெருவீதிதான்கடந்து
அண்டையசல்பெண்களே அக்காமாரே தங்கைமாரே
எதிர்வீட்டுப்பெண்களே என்னைப்பெற்றதாய்மாரே
ஆரடிதங்கையரே அசல்வீட்டுத்தமக்கையரே



என்பிறப்புநல்லதங்கா ளிங்குவரக்காணலையோ
ஏழுபிள்ளைநல்லதங்கா ளிங்குவரக்காணலையோ
அசல்வீட்டுத் தங்கைமார்க ளரிவையர்களெடுத்துரைப்பார்
வந்தாளேவந்தாளே மதனியர்மாளிகைக்கு
வந்ததேதபோதுமப்பா மாபாவிவாசலுக்கு
அவள்-பண்ணுதகோலமெல்லாம் பண்ணினாளுன்தேவி
வந்தவுடனேயவள் வாசல்கதவடைத்தாள்
ஒருக்கதவடைத்தாள் ஒருமட்டாய் மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்தாள் தாள்பூட்டிமண்ணறைந்தாள்
ஈரமண்கொண்டுவந்து இருபக்கந்தானறைந்தாள்
குழந்தைகுடிப்பதற்கு கூழுங்கிடையாதென்றாள்
பசியாறுதான்தணியப் பச்சைஜலமில்லையென்றாள்
கண்கள்தெளிவதற்கு கரண்டிஜலமில்லையென்றாள்
செய்யாதகோலமெல்லாம் செய்துவைத்தாளுன்தேவி
கவிழ்ந்ததிருமுகத்தை கண்ணெடுத்துப்பாரேனென்றாள்
பண்ணுதகோலமெல்லாம் பண்ணிவைத்தாளுன்தேவி
கொண்டைகள்வைத்திருக்குங் கோணுதசாலைவழி
அருமைமக்களெழுவருடன் ஆத்தாளும்போய்நடந்தாள்
போனதோர்சேதிதன்னை போர்மன்னன்தானறிந்து
தங்கையும்போனவழி தானுமறியவில்லை
என்றுமேநல்லதம்பி இயல்பாகயேதுசொல்வான்
என்னுடநல்லதங்கையைநான் காட்டிலேகண்டழுதேன்
வீட்டுக்குவந்ததொரு பொல்லியரைநானறியேன்
ஏதேதுசெய்தாளோ என்னுடையபெண்சாதி
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மருந்துதான் வைத்தாளோ மாயப்பொடிபோட்டாளோ
சூழ்தான்வைத்தாளோ என்னவகைசெய்தாளோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானினைந்து

## நல்லதம்பி நல்லதங்காளை காட்டில் தேடுதல்

அப்போ-ஒற்றைநாயோடேயல்லா ஓடுகிறான்நல்லதம்பி
ஓட்டமாயோடும்போது உத்தமனார்வீரியத்து
பிலைசதுடித்திடுமாம் வெகுகோபமவந்திடுமாம்
கண்கள் சிவந்திடுமாம் காந்தாளம்வந்திடுமாம்
பக்கச்சதைகளெல்லாம் பதைத்துத்துடித்திடுமாம்
அடுத்தொடைகளெல்லாம் அம்பாய்பறந்திடுமாம்
ஆனைமுகத்தனை அடையாளம்தான் பிடித்தான்
அங்கேயாழிபோதிரத்தைதக் கண்டுமேதானெடுத்தான்
எடுத்துமேநல்லதம்பி இயலாகத்தானினைப்பான்
இந்தவழியில்தானே இவளுமிருக்கவேண்டும்

என்றுமேகுதிரைவிட்டான் இயல்பாய்நல்லதம்பி
குதிரைவிடும்போது சொற்றவனுமேதுசொல்வான்
மாடுமேய்க்குந்தம்பியரே மாட்டாஞ்சிறுபாலகரே
என்பிறப்புதங்கையவ ளிங்குவரக்கண்டதுண்டோ
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவரக்கண்டதுண்டோ
அப்போதுமாட்டிடையர் அறியவெடுத்துரைப்பார்
வந்தாளிருந்தாளையா வழிமார்க்கம்போனாளையா
உங்கள்குலமென்றறியோம் உன்பிறவியென்றறியோம்
இருட்டுக்கிணறென்று ஏந்திழையும்கேட்டாளே
காட்டிக்கொடுத்தோமையா காரிகையாள்நாயகிக்கு
அப்படிச்சொல்லுகையில் அன்பானநல்லதம்பி
நீங்கள்-காட்டிக்கொடுக்கலாமா கடக்கப்போய்நிற்கலாமா
பார்த்துமிருந்தீர்களா பழிகாரப்பாவிகளா
எனக்குப்பிறப்பொழிய உமக்குப்பிறப்பல்லவே
என்றுமேநல்லதம்பி இயல்பாகத்தானடந்தான்
காடுசெடிகளெல்லாம் கனக்கவேதேடிவாரான்
ஆறுசுனைகளெல்லாம் ஆங்காங்குதேடிவாரான்
குட்டைகுளங்கண்டாலே குதித்திறங்கித்தேடிவாரான்
துறவுகளைக்கண்டாலே துள்ளியேதேடிவாரான்
வழியிலேப்படித்தேடி வருகின்றவேளையிலே
நல்லதங்காள்விழுந்த நற்கிணற்றின்முன்னேவந்தான்
பாலூட்டும்பாலாடை பாவாடையடையாளம்
மங்கிலியம்கண்டானே மன்னனந்தநல்லதம்பி

## நல்லதங்காள் கிணற்றில் விழுந்திறந்ததைக் கண்டு நல்லதம்பி பரதவித்தல்

அப்போ-பாழுங்கிணற்றருகே பார்த்துவயிறெரிந்தான்
இருண்டகிணற்றருகே ஏங்கிமனந்தளர்ந்தான்
தங்கைதங்கையென்றல்லோ தரையிற்புரண்டழுதான்
அம்மாடியென்றல்லோ அடித்துப்புரண்டழுதான்
முத்துபோல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
பம்பைமயிரையெல்லாம் பாழ்கிணற்றிற்பிச்செறிந்தான்
ஐயோசிவனேயென்று அடித்துப்புரண்டழுதான்
ஓடிக்குதித்தானே உத்தமியாள்கையிலே
தாண்டிக்குதித்தானே தயவானகங்கையிலே
உடன்பிறந்தாள்பிள்ளையெல்லாம் ஓடியெடுக்கலுற்றான்
தன்பிறப்புப்பிள்ளையைத் தாவியெடுக்கலுற்றான்
தங்கையைமெல்லவல்லோ தடவியெடுத்தானே
வாரியெடுத்துவைத்து வண்ணமடிமேலே
முகத்தோடேமுகமணைத்து முத்தமிட்டுக்கொண்டானே



செத்தபிணத்துக்கு சீரிட்டுப்பார்த்தழுதான்
மாண்டபிணத்துக்கு வரிசையிட்டுப்பார்த்தழுதான்
நாவற்பழமோ தான் நல்லதங்காள்பெற்றபிள்ளை
கோவைப்பழமோ தான் கொம்பனையாள்பெற்றபிள்ளை
மையொத்தபாலகண்டி கண்ணாட்டிபெற்றபிள்ளை
நச்சம்பழமோ தான் என்னுச்சிபெற்றபிள்ளை
கைக்கேற்றபாலன் கண்ணாட்டிபெற்றபிள்ளை
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானுமப்போ

## நல்லதம்பி நல்லதங்காளையும் பிள்ளைகளையும் தகனஞ் செய்தல்

தங்கையைத்தானெடுத்து தகனஞ்செய்யவேணுமென்று
வஞ்சகாரிதன்னாலே உடன்பிறப்பைநானிழந்தேன்
மாபாவிதன்னாலே மருமகனைநானிழந்தேன்
பெண்சாதிதன்னாலே பெண்பிறப்பைநானிழந்தேன்
ஊரில்நெருப்பெடுத்தால் உலகோர்சிரிப்பாரென்று
நாட்டில்விறகுகொண்டால் நல்லார்சிரிப்பாரென்று
சந்தனக்கட்டைகொண்டு சதுராய்ப்பிளந்தடுக்கி
சந்தனக்கட்டையிலே தங்கையைத்தான்வளர்த்தி
குங்குமக்கட்டையிலே குழந்தைகளைத்தான்வளர்த்தி
ஒருபடிநெல்லதனை வாய்க்கரிசிபோட்டானங்கே
செண்பகமாலை சிவமாலைவந்திடுமாம்
மல்லிகைமாலைகொண்டு மன்னனலங்கரித்து
சுற்றிவந்துகொள்ளிதனை வைத்தானேதோகையர்க்கு
வலம்வந்தழுதுகொள்ளி வைத்தானேநல்லதம்பி
நெருப்புப்பிடிக்கவில்லை நீறாய்ச்சமையவில்லை
அக்கினிபற்றவில்லை அனலாய்ச்சமையவில்லை
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைகோபமென்ன
என்மேலேகோபமது வைக்காதேயென்பிறப்பே
பத்தினியிருந்தாயானால் பழிகளைவாங்குவேனுன்
முன்போலெழுந்தாயானால் உயிர்களைவாங்குவேனுன்
நாளைபகலுக்கு நான்வாரேன்தங்கையரே
இப்படிச்சொல்லியண்ணன் இரண்டடிதான்நடந்தான்
நடந்தவன்போனபின்பு நாயகியக்கினிதான்
குப்பென்றுதானெழுந்து கொழுந்துவிட்டெரிந்திடுமாம்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

## நல்லதம்பி நல்லதங்காளை தகனஞ்செய்து வீடுவந்து சேர்தல்

நல்லதம்பியப்போது நலமாகத்தன்மனையில்
வந்துதான்துக்கமன்னன் இயல்பாய்சிறைகாத்து

அறுகுபொறுக்கியண்ணன் அலறத்தலைமுழுகி
முக்காட்டையிட்டுராஜன் மூலையிலேபோய்படுத்தான்
அப்போது-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தன்னுடையபத்தனியாள் தன்னெதிரேவந்துநின்று
ஆளன்முகம்நோக்கி ஆரணங்கேதுசொல்வாள்
ஏன்காணும்ராஜமன்னு எந்தன்மேற்கோபமென்ன
பொல்லாததங்கையவள் போனாலும்போகிறாள்
ஆகாதநல்லதங்கா ளவள்போனால்பொருள்காண
நீர்-காலின்மிதியடியை கழற்றிவைக்கலாகாதோ
கொண்டுவந்தவேட்டைகளை கூறிடவுமாகாதோ
அப்போதுநல்லதம்பி ஆளனெடுத்துரைப்பான்
எனக்குமுனக்கும்பெண்ணே எட்டுமாதம்விரதமுண்டு
என்-வருத்தம்தொலைந்தாலே மாதேநானுண்டிடுவேன்
உனக்குமெனக்கும்பெண்ணே ஒருபிள்ளையுண்டல்லவோ
நம்முடையபிள்ளைக்கு நலமாகவிப்பொழுது
கலியாணஞ்செய்யவேணும் கண்குளிரப்பார்க்கவேணும்
கண்ணுள்ளபோதேபெண்ணே கண்காட்சிகாணவேணும்
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளிக்கு
மன்னவனார்நல்லதம்பி மர்மந்தொடுத்தானே
கலியாணகாரியத்தைக் கடுகெனவேசெய்யென்று

## நல்லதம்பி பிள்ளைக்குக் கலியாணஞ்செய்ய பந்தல் அலங்கரித்தல்

சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
முத்தைப்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
பவளத்தைப்பிளந்து பந்தலலங்கரித்து
தேக்குமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வாழைமரம்பிளந்து வாசற்காலலங்கரித்தார்
இட்டார்கள்பந்தலங்கே இருநூறுக்காதவழி
தொட்டார்கள்பந்தலங்கே தொண்ணூறுக்காதவழி
ஓலையால்பந்தலங்கே உத்தமர்க்குத்தானுமிட்டார்
நல்லதம்பிசேனைகட்கு நலமாகப்பந்தலிட்டார்
தன்னுடையசேனைகட்கு தகுமானபந்தலிட்டார்
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்
கல்தச்சரையழைத்து கட்டழகனேதுசொல்வான்
தச்சர்களேதச்சர்களே தகுமானதச்சர்களே
என்வார்த்தைகேளுங்க ளெனக்கிசைந்ததச்சர்களே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
என்னுடன்பிறந்த எனக்கினியாள் நல்லதங்காள்



ஏழுபிள்ளை நல்லதங்கா ளென்வீடுவந்தவிடத்தில்
பசித்தமுகம்பார்த்து பாலாடைபால்வாராததால்
களைத்தமுகம்பார்த்து கரண்டிப்பால்வாராததால்
என்தங்கை நல்லதங்கா ளேந்திழையும்கோபமாகி
கோபம்பொறுக்காமல் கொம்பனையுந்தானடந்து
பிள்ளைகளுந்தானுமாக போய்குதித்தாள் பொய்கையிலே
மக்களுந்தானுமாக மாண்டாளேபெருந்துறவில்
அப்படியேசெய்ததொரு அரும்பாபியென்மனையாள்
என்மனையாள்சேனைகட்கு இடிபந்தல்போடுமென்றான்
கற்பந்தல்போட்டு கலித்துவிடுசேனைகளை
அந்தவுரைகேட்டு அழகுள்ள தச்சரெல்லாம்
அரும்பாவிசேனைகட்கு அழகுபந்தல்போட்டார்கள்
பெரும்பாவிசேனைகட்கு பெரும்பந்தல்போடுவித்தார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கு
ஆணழகன் நல்லதம்பி அனர்த்தம்வரபந்தலிட்டார்
சூத்திரப்பந்தலிட்டார் சுழல்பந்தல்தானுமிட்டான்
காலாலேபந்தலது கலகம்வரத்தானுமிட்டான்
தன்னுடையசேனைகட்கு தென்னோலைபந்தலிட்டான்
பந்தலிட்டபிற்பாடு பார்மன்னரேதுரைப்பான்
மன்னவன் நல்லதம்பி மர்மமாயேதுரைப்பான்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
படுபாவிநாயகிக்கு பட்சமாயேதுரைப்பான்
உங்கள்மனிதருக்கு உகந்துநீபாக்கனுப்பும்
எங்கள் மனிதருக்கு யான்பாக்கனுப்புகிறேன்
என்றுரைத்த நல்லதம்பி எல்லோருக்கும்பாக்குவைத்தான்
கப்பல்கடந்து கடலேறிபாக்குவைத்தான்
வற்றிக்கிடந்ததொரு வாகானகாவேரி
காவேரிநிறம்பியங்கே கரைபுரண்டு வந்ததுபோல்
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
மட்டில்லாபாக்குமிங்கே மனிதருக்குப்போகவிட்டான்
சின்னமடிகோலி சீமையெல்லாம்பாக்குவைத்தான்
பெரியமடிகோலி பூமியெங்கும் பாக்குவைத்தான்
கலியாணமென்றுசொல்லி கடலேறிப்பாக்குவைத்தான்
இப்படியாகப்பாக்கு இன்பமாய்வைத்தபின்பு
தன்னுடையசேனைகட்கும் தாம்பூலம்வைத்தபின்பு
மூளியலங்காரிமூதேவிசண்டாளி
ஜாதிசனங்களுக்கு தனிப்பாக்குதானளித்தான்

### நல்லதம்பி ஓலையெழுதி அனுப்புதல்

ஆணழகுமன்னன் அறிவுள்ள நல்லதம்பி
என்னவென்றுசொல்லி எழுதுவானோலைதன்னை



என்பிள்ளைதம்பியற்கு இயல்பாகவிப்பொழுது
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
வெள்ளிக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாங்கானஓலையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அனைவருந்தாமறிய அவ்வோலையெழுதினானே
கலியாணவோலைதன்னை கடுகெனவேயெழுதினானே
அப்போ-மன்னவனார்நல்லதம்பி மர்மமாயெழுதுகிறான்
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
என்தங்கைநல்லதங்காள் இளங்கொடியாள்நாயகியும்
கூடப்பிறந்த குலப்பெண்ணுமென்தங்கை
தங்கையும் பெற்றெடுத்த தனஞ்செயர்களேழுபேரும்
பங்குனிமாதத்திலே பதின்மூன்றாந்தேதியிலே
வியாழக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பாழுங்கிணற்றதனில் பத்தினியும்பிள்ளைகளும்
விழுந்துஇறந்தார்கள் விதியினுடகாரணத்தால்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுண்டம்சேர்ந்தார்கள்
அரும்பாவிதன்னாலே அரன்பாதஞ்சேர்ந்தார்கள்
கொடும்பாவிதன்னாலே கொம்பனையாள்தானிறந்தாள்
மாண்டுமடிந்தசேதி மண்ணிலுள்ளோர்தாமறிய
செத்துமடிந்தசேதி சீமையுள்ளோர்தாமறிய
ஓலையெழுதினானே உத்தமசிகாமணியும்
மாண்டுமடிந்தாரென்று மன்னனோலையெழுதினானே
ஓலையெழுதியல்லோ உகந்துகுறியுமிட்டு
இறந்தவோலைதானெழுதி இருபக்கம்சுட்டெரித்து
இருவோலைதன்னையு மிசைவாகத்தானெடுத்து
தூதுவனைத்தானழைத்து சுருக்காயெடுத்துரைப்பான்
ஓலைச்சுருள்கொடுத்து உத்தமனுமேதுசொல்வான்
மூளியலங்காரி மூதேவிசேனைகட்குக்
கலியாணவோலைதன்னைக் கையிற்கொடுமென்று
என்றுமேநல்லதம்பி ஏற்றமாய்தான்கொடுத்து
தூதுவரானவர்க்குச் சுருக்காயெடுத்துரைப்பான்
எந்தனதுசேனைகட்கு இறந்தவோலைகொண்டுசெல்லும்
என்றுமே நல்லதம்பி இசைவாகத்தான்கொடுத்தான்
கொடுத்ததைதான்வாங்கி கொப்பெனவேதானடக்க
அரசன்சொல்கடவாமல் அப்பொழுதேதபோகலுற்றார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கும்
நல்லதம்பிதன்னுடைய நலமுள்ளபந்துகட்கும்
ஓலையைதான்கொடுத்து உத்தமரும்வந்துவிட்டார்

இப்படியாகவே இருக்கின்றவேளையிலே
இருதிறத்துசேனைகளும் அங்கேபயணம்வாரார்
மூளியலங்காரி மூதேவிசேனையர்கள்
வருகின்றசந்தோஷம் மட்டுமிதங்களில்லை
பார்க்கமுடியாது பாரிலிடங்கொள்ளாது
காணமுடியாது கட்டுரைக்கலாகாது
அவரவர்கள்-தங்கக்கிரீடமும் தார்வேந்தர்தன்னழகும்
முத்துக்கிரீடமும் முடிமன்னர்தோளழகும்
பவளக்கிரீடமும் பார்மன்னர்தோளழகும்
உத்தரீயம்தான்புரள உத்தமர்கள்வாராரே
தேரேறிமன்னரெல்லாம் தெருவீதிவாராரே
ஆனையேறிமன்னரெல்லாம் அசைந்துமேவாராரே
கொண்டைமுடியுடனே கொண்டைதாங்கிபூவுடனே
அவர்களதுதேவிகளும் அநேகம்பேர்தாதிகளும்
மஞ்சள்குளிப்புடனே மையுடனேபொட்டுடனே
பாங்கிமாரெல்லோரும் பல்லக்குதாங்கிவர
வந்துநிறைந்தாராம் வாசலிடங்கொள்ளாமல்
பத்தியாயுட்கார்ந்தார் பந்தலிடங்கொள்ளாமல்
ஆணழகன் நல்லதம்பி அவனுடையசேனைகட்கு
இவனுடையமனிதருக்கு இறந்தவோலைவந்தபின்பு
ஓலைச்சுருள்படிக்க உடன்பிரித்துப்பார்த்தார்கள்
தாமக்கருங்குழலாள் நல்லதங்காள்மாண்டாளென்று
நாமமுடியழகன் நல்லதம்பிராஜாவின்
சேனைகளத்தனையும் சேர்ந்துமிகவழுதார்
முட்டியழுதார்கள் முகத்திலறைந்துகொண்டுதானழுதார்
அவரவர்தடக்கையா லடித்துக்கொண்டுதானழுதார்
தாய்வீட்டுசேனையெல்லாம் தலைவிரித்துதானழுதார்
மார்பிலறைந்துக்கொண்டு மண்மேல்புரண்டழுதார்
போய்ப்பார்ப்போமென்று சொல்லிபுண்ணியர்கள்வாறார்கள்
கண்டுவருவோமென்று காரிழைமார்வாரார்கள்
வாடிமுகந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
இளைப்புங்களைப்புமாக எல்லோரும்வாரார்கள்
அலைகுலையத்தலைகுலைய அனைவோரும்வாரார்கள்
வந்துமேஉள்நுழைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
நேர்த்தியாயமைந்திருக்கும் சூத்திரப்பந்தலின் கீழ்
சூத்திரப்பந்தலின் கீழ் சூழ்ந்துநிறைந்தார்கள்

### நல்லதம்பி பிள்ளை தாலி தரித்தல்

இப்படியாக இருக்கின்ற வேளையிலே
நல்லதம்பி பெற்றெடுத்த தாமமுடியானை



சீயக்காய்நெல்லி சிறுபயிறுகஸ்தூரி
வாசனைவர்க்கமுடன் வகைவகையாய்க்கொண்டுவந்து
மணவறையின்மேலாக மாப்பிள்ளையைகுந்தவைத்து
மாப்பிள்ளை பெண்ணுக்கும் மணவறையில் நலங்குமிட்டார்
சிக்கைக்கழித்தார்கள் சீராக இருவருக்கும்
ஸ்நானங்கள் செய்துவைத்தார் தாமமுடியார்கள்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்புமிட்டு
மாப்பிள்ளையைக்கொண்டுவந்து மன்னரலங்கரித்தார்
அநேகவிதபூஷணத்தால் அலங்கரித்தானபின்பு
பொற்கொடியாரெல்லோரும் பெண்ணையலங்கரித்தார்
இருவரையுங்கொண்டுவந்து இன்பமுள்ளபந்தலிலே
மணவறையின்முன்பாக மன்னவனைக்குந்தவைத்து
அரசாணிமுன்பாக ஆளனைக்குந்தவைத்து
முன்னூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலி கழுத்திலேயென்றுரைத்தார்
அப்போது ஆணழகனப்படியே கட்டலுற்றான்
என்னவென்றுசொல்லி எடுத்தவன் கட்டலுற்றான்
சிவசிவாவென்றுசொல்லி திருக்கழுத்தில் தாலிகட்டினானே
அரகராவென்றுசொல்லி அழுத்தினார்மங்கிலியம்
முன்முடிமூன்றுமுடி போட்டான்பின்பு
அங்கிருந்தமன்னரெல்லாம் அழகுபட்டங்கட்டினார்கள்
அம்மான்மாரெல்லோரும் அடங்கலும்பட்டமிட்டார்
நல்லதம்பிபெற்றெடுத்த நவமணியேதுரைப்பான்
என்-ஐயாவேஐயாவே அடியேனொருவார்த்தை
உம்முடன்தான்பிறந்த உத்தமியாள்நல்லதங்காள்
அவளுமொருசீமை ஆளுகின்றாளென்றீரே
அவள்பேரைச்சொல்லி அழகுபட்டம்கட்டுமென்றான்
அத்தைபேரைச்சொல்லி அணியவேண்டுமென்றான்
அத்தையின்பேருரைக்க ஆணழகன்வயிறெரிந்து
பொன்னின்குடமேயென் பூபாலராஜாவே
அத்தையைக்கொன்றவள்தான் அரும்பாவியுன்தாயார்
மாமியைக்கொன்றவள்தான் மாபாவியுன்தாயார்
என்று-அதிகவயிறெரிந்து அப்போதுநல்லதம்பி
வாளையுருவி மன்னனுந்தானெழுந்தான்
தகப்பனிடகோபத்தை தார்வேந்தன்தான்பார்த்து
அண்ணாவே அண்ணாவே அதிககோபங்கொள்ளாதே.

கலியாணவாசலிலே கலகங்கள்வையாதே
இங்குவைத்தசூத்திரங்க ளெனக்குத்தெரியவரும்
அதற்குமேல்சூத்திரங்க ளறிவேன்காணென்தகப்பா
இன்னமொருநாழிகையி லங்கேதெரியுதுபார்
மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அவளுடையசேனையெல்லாம் அரன்பாதஞ்சேருதுபார்
மாதாவின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
பதராதேபதராதே பட்சமுள்ளயென்தகப்பா
அரும்பாவிசேனையெல்லாம் அடியோடுமாளுதுபார்
மாபாவிசேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
பொறும்பொறுமென்று பொன்னடிக்குத் தெண்டனிட்டான்
அப்போதுஆறினன்கோபம் அமர்ந்தான்கொலுதனிலே
கலியானசடங்குகள் கடுகமுடிந்தவுடன்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
மன்னவனார் நல்லதம்பி மர்மமாயெடுத்துரைப்பான்
உங்கள்மனிதருக்கு உண்ணவேநீபடைப்பாய்
எங்கள்மனிதருக்கு யான்படைப்பேன்சாதங்கறி
தன்கணவன் சொன்னபடி சம்மதித்தாள் மூதேவி
அப்போதுபந்திகள் அமர்த்தினார்பந்தலிலே
மூதேவிசேனைகள் முடிமன்னரத்தனையும்
சூத்திரப்பந்தலின் கீழ் சூழ்ந்திருந்தாரெல்லோரும்
நல்லதம்பிசேனையெல்லாம் நலமானபந்தலிலே
பக்கங்கொலுவிருந்து பந்தியமர்ந்தார்கள்
வரிசைவரிசையாக வந்தார்இலைபோட்டு
வாழையிலைபோட்டு வட்டித்தார்சாதங்கறி
இவளுடையசேனைக்கு இவள்பரிமாறிவாராள்
நல்லதம்பிசேனைக்கு நங்கையவளேதுசெய்தாள்
வஞ்சனையாகவல்லோர் வட்டித்துவாராளே
வரகரிசிசாதமது வட்டித்தாளப்போது
அகத்திக்கீரைகுழம்பதனை அள்ளியவள் தான்வார்த்து
வஞ்சனைசெய்துமல்லோ வாராளலங்காரி
தங்களுடையசேனைக்குத் தகுந்தபடியேதுசெய்தாள்
குத்துப்பருப்புமிட்டாள் கூசாமல்நெய்சொரிந்தாள்
அள்ளிப்பருப்புமிட்டாள் அதுகண்டுநெய்வார்த்தாள்
பத்துவிதக்கறியும் பாங்கானகூட்டும்
எட்டுவிதக்கறியும் இயலானபச்சடியும்
சுத்திக்கறியும்வைத்து சொம்புதயிர்முன்னேவைத்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசரணை செய்திருந்தாள்
நல்லதம்பிசேனைகட்கு நடக்குதுவேறுவிதம்
அப்போது-மூளியலங்காரி மூதேவி சண்டாளி



தன்னுடையசேனைகட்கு தான்பரிமாறிவாராள்
பாவையுடசேனையெல்லாம் பந்தியமர்ந்தார்கள்
அந்தநல்லவேளையிலே அங்கிருந்தசேனையர்கள்
ஆகாதகுறிகள் அட்சணமேகண்டார்கள்
இருக்கின்றமன்னருக்கு இடதுதோள்துடித்திடுமாம்
வைத்திருந்தசாதங்கறி ரத்தக்கவுலடிக்கும்
அங்கிருந்தசேனையெல்லாம் அவர்களுமேதுசொல்வார்
அப்போதுசேனையர்க ளடங்கலுமேதுசொல்வார்
என்னமோ ஏதோ இடிவந்து நேர்ந்திடுமோ
மாளாப்பழிநமக்கு மீளாமல்வந்திடுமோ
தீராப்பழிநமக்கு சேரவேவந்திடுமோ
என்றுசொல்லிமன்னவர்க ளேங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
என்னமோஏதோவென்று இருக்கின்ற வேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதம்பிசேனைகட்கு நன்றாய்ப்படைக்கலுற்றாள்
அகத்திக்கீரைகுழம்பு அடைவாகத்தான் வார்த்தாள்
உண்ணுங்களென்று உபசரணைசெய்துவாராள்
சாதமுங்கீரையும் நல்லதம்பிசேனையுண்ணுகிறார்
முன்சோறுஉண்டுமல்லோ பின்சோறெடுக்கும்போது

### நல்லதம்பி ஆசாரியரைக் கண்டு மூளியலங்காரி பேரில் சுழற்பந்தலை தட்டி மடியவைத்தல்

அப்போது நல்லதம்பி ஆசாரிக்கொடுத்துரைப்பான்
அண்ணாவேஅண்ணாவே ஆசாரி அண்ணாவே
ஆர்காணுமாசாரி அறியவொருவார்த்தை
மூளியுடசேனையெல்லாம் முழுதும்மடிவதற்கு
அவதானபந்தலை அடுக்காகத்தட்டிவிடு
போய்நீயும்தட்டிவிடு புத்தியுள்ள ஆசாரி
பந்தலின் சூத்திரத்தைப் பறித்துவிடும்மாசாரி
என்றுசொல்லநல்லதம்பி எடுத்துவிட்டானாசாரி
தந்திரமாய்ப்பந்தலையும் தட்டிவிட்டானாசாரி
அவதானபந்தலை அடுக்காகத்தட்டிவிட்டான்
மூளியுடசேனையெல்லாம் முறிந்துமடியுதங்கே
அப்போது-மூளியலங்காரி மூதேவி சண்டாளி
கையைமுறித்துக்கொண்டு கதவண்டைபோய்ச்சேர்ந்தாள்
என்னசெய்யப்போறேனென்று ஏங்கியழுகலுற்றாள்
ஒப்பாரிக்குரலிட்டு ஓங்கியழுகலுற்றாள்
மாபாவிசீமையிலே மன்னர்களைத் தோற்றுவிட்டேன்
பெரும்பாவிசீமையிலே பெண்களைத்தோற்றுவிட்டேன்

ஒருகோடிகும்பலிழந்து ஒற்றைக்காலாகிவிட்டேன்
சூதுசெய்துகொன்றனே துரோகியவனென்கணவன்
சல்லாலேபந்தலிட்டுக் காளைகளைக்கொன்றுவிட்டான்
ஒருத்திவந்துள்நுழைந்து ஒருகோடிகும்பலிழந்தேன்
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நின்றுபுலம்புகையில் கண்டானேராஜமன்னன்
ஆணழகன்நல்லதம்பி அலங்காரிக்கெடுத்துரைப்பான்
பத்துபேரைக்கொன்ற பழிகுலத்திவாடியென்று
எட்டுபேரைக்கொன்ற இழிகுலத்திவாடியென்று
என்னென்னபங்கம் இளங்கொடிக்குசெய்யலுற்றான்
முன்சிகையைதான்பிடித்து நல்லமணப்பந்தலிலே
மூக்குஸ்தனமறுத்தான் முத்துபடிபந்தலிலே
கொண்டையறுத்தானங்கேகொத்தோடேதொங்கவிட்டான்
காதையறுத்தானங்கே கழுத்திலேதொங்கவிட்டான்
கண்ணைப்பிடுங்கியங்கே எண்ணெயையூற்றிவந்தான்
இன்னமும்நல்லதம்பி ஏதேதுசெய்யலுற்றான்
கழுதையைக்கொண்டுவந்து கட்டழகிமூளியரை
கழுத்திலெருக்கமாலை கனமாகச்சூட்டிவிட்டான்
கழுதையின்மேலேற்றிவைத்து கைகொட்டிதான்நகைத்தா
சேவகரைத்தானழைத்து தெருவிலிழுங்களென்றான் [ன்
கழுதையைக்கைபிடித்து கடுகயிழுங்களென்று
அழகுள்ளவீதியெல்லாம் அங்கங்கேசுற்றுமென்றான்
நாலுதெருவிலே நாரியவள்கோலம்வந்தாள்
மூன்றுதெருவிலே மூதேவிகோலம்வந்தாள்
நாலுகோலம்வந்தபின்புநல்லதம்பியேதுசெய்தான்
மூளியலங்காரி மூதேவிதோஷியரை
சுண்ணாம்புக்கால்வாயில் சுட்டானேசுந்தரியை
சுட்டானேசுந்தரியை சுகமானநல்லதம்பி
இப்படியாக இருகின்றவேளையிலே
மனையாளைச்சுட்டெரித்த மாற்றுநாள்காசிராஜன்
மச்சான்வரவை மன்னவனும்பார்த்திருந்தான்
நல்லதங்காள் நாயகனும்நற்காலம்தான்பிறந்து
காசிராஜனுக்கு காலந்தெளிந்ததேயங்கே
காலமதுதெளிந்து கனத்தமழைபொழிந்து
சீமையதுதெளிந்து செல்வமழைபொழிந்து
முப்போகத்தான்விளைந்து முயற்சியுள்ளசீமையிலே
காலந்தெளிந்தது கம்புவிளைந்தது
சீமைசெழித்தது செல்வமழைபேய்ந்தது
நாடுசெழித்தது நல்லமழைபேய்ந்தது
கருப்புதெளிந்தபின்பு காசிராஜனேதுசெய்தான்



தாய்வீடுபோனபெண்ணை தானழைக்கவேணுமென்று
நல்லதங்காள்நாயகியை நாயகனழைக்கவென்று
செட்டிகடைக்குவந்தான் சேலைவிலைமதித்தான்
பாப்பான்கடைக்குவந்தான் பட்டாடைவிலைமதித்தான்
பாரியவளேறிவர பல்லக்குக்கொண்டுவாரான்
புத்திரர்களேறிவர பொன்வண்டிகொண்டுவாரான்
பலபலகனிவகைகள் யாவருக்கும்கொண்டுவாரான்
சிற்றுடைகொண்டுமன்னன் சிறுசதங்கைகொண்டுவாரான்
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவாரானே
குதிரைபரிவாரம் கோடிதளம்முன்னடக்க
ஆனைபரிவாரம் அடங்கலும்பின்னடக்க
கவிஞர்பாடிவரக் கட்டியங்கள்கூறிவர
ஆனையுஞ்சேனையும் அத்தனையும்முன்னடக்க
எக்காளைதானூத இடிபாணந்தான்முழங்க
நாதசுரம்ஊத நகாரிநற்கொம்பூத
பேரிகைகொட்டிவரப் பெரியசின்னம்ஊதிவர
கத்திகட்டுஞ்சேவகருங் காவலரும்முன்னடக்க
வந்துநிறைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
நல்லதம்பிக்குக்காசி நாடனெடுத்துரைப்பான்
மைத்துனரேமைத்துனரே மனையாட்டியெங்கேயென்றான்
எலுமிச்சம்வர்ணமான இளங்கொடியாளெங்கேயென்றான்
என்றகாசிராஜனுக்கு அடைவர்கயேதுசொல்வான்
அருந்தங்கைசெத்துமச்சான் அநேகநாளாச்சுதப்பா
அப்போதுகாசிராஜன் அடைவாகயேதுசொல்வான்
பெண்சாதிபோனாற்போகுள் பிள்ளைகளெங்கேயென்றான்
அப்போதுமன்னவனு மைத்துனனுக்கேதுசொல்வான்
ஒன்றிரண்டுமாண்டாலும் உலகத்திலுள்ளதென்பார்
ஏழுபிள்ளைமாண்டவித மெனக்கறியச்சொல்லுமென்றான்
அந்தவுரைகேட்டு ஆணழகன்நல்லதம்பி
மர்மமொளியாமல் மைத்துனருக்கேதுசொல்வான்
வந்தாளேநல்லதங்காள் மக்களுந்தானுமாக
காட்டிலேகண்டுநான் வீட்டுக்குப்போங்களென்றேன்
எத்தனுரைப்படியே இளங்கொடியாள்வீடுவந்தாள்
புத்திரர்கள்தானுமாக பொற்கொடியாள்வீடுவந்தாளென்று
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
செய்தகொடுமையாலே செல்வவதிபிள்ளைகளும்
கோபம்பொறுக்காமல் குதித்தார் பொய்கையிலே
அந்தவிசேஷம் அறிந்துநாளோடிவந்து
மாண்டவரைத்தானெடுத்து மயானத்திலெரித்தேன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளியை

தங்கைப்பழிக்காக தகுந்தபழிவாங்கிவிட்டேன்
மக்கள்பழிக்காக மனையாளைக்கொன்றுவிட்டேன்
நான்-இறந்துமடியாமல் இருந்தேனுனக்காக
என்றவுரைகேட்டு ஏங்கிமனந்தளர்ந்து
பிள்ளைகட்குக்காட்சியாய் பெண்கொண்டுவாராமல்
கலியாணம்செய்துநான் கண்குளிரப்பாராமல்
செல்வரைப்பார்க்கிலும்நான் சீமையாளப்போறேனோ
மைத்தரைப்பார்க்கிலும் நான்மண்டலமாளுவேனோ
என்றுமேகாசிராஜன் இனியில்லாத்துக்கமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
அப்போதுநல்லதம்பி அதிகவிசனமுடன்
தங்கையைப்பார்க்கிலும்நான் தரணியாளப்போறேனோ
மச்சானைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமவன்நல்லதம்பி இனியாருக்கோபமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
இந்தவிதமாக இவர்கள்மடிந்திருக்க

### நல்லதங்காள், நல்லதம்பி, காசிராஜன் ஏழு பிள்ளைகள் இவர்கள் மடிந்திருப்பதைக் கண்டு பார்வதியும் பரமசிவனும் வந்து எழுப்புதல்

பார்வதிதேவியர்க்குப் பார்க்கமுடிபோகவில்லை
பரமசிவனுக்குப் பார்க்கமுடிபோகவில்லை
ஈஸ்வரனுமீஸ்வரியும் இரக்கமுடன்தானெழுந்து
இடபவாகனமேறி இன்பமுடன்தானப்பொழுது
கைலாசம்விட்டுமவர் கடுகப்பயணமதாய்
கப்பரையிற்தண்ணீர்கொண்டு கையில்பிரம்புகொண்டு
கையில்பிரம்பெடுத்து கப்பரையில்ஜலமெடுத்து
செத்தவர்கள்தன்மேலே சீராய்தெளிப்பதற்கு
பார்வதிதேவியாரும் பரமசிவனும்
கைலாசம்விட்டல்லோ கடுகவழிதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இவர்களும்வந்தார்கள்
பாழுங்கிணற்றருகே பரமசிவன்வந்துநின்று
இருண்டகிணற்றருகே ஈஸ்வரியும்வந்துநின்று
ஏழுபிள்ளை நல்லதங்காள் இறந்துகிடப்பவர்மேல்
தண்ணீரைத்தான்தெளித்துத் தட்டியெழுப்பினார்கள்
அப்போ-தூங்கியெழுந்தவர்போல் சுகமாயெழுந்தார்கள்
மச்சானும்மச்சானும் அச்சமில்லாதெழுந்தார்கள்
ஏழுபிள்ளைதானுமப்போ எழுந்திருந்துவந்தார்கள்



அப்போது நல்லதங்காள் அரிவையெழுந்துரைப்பாள்
அரகராமகாதேவா அந்திவண்ணபரசுபாணி
என்னுக்குள்நிறைந்துநின்ற ஏகப்பரஞ்சுடரே
என்தாயேபார்வதியே என்னையாளவந்தவனே
எங்களையெழுப்பிவைத்த ஏகபராபரியே
உங்கள் தரிசனங்கண்டுள்ளமெல்லாம்பூரித்தோம்
எங்களுக்குகாட்சிதர இன்பமுடன்வந்தீர்கள்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கமாய்ப்பணிய
ஐயனரனும் அம்மனும்போய்மறைந்தார்
இப்படியாக இளங்கொடியாளேதுசொல்வாள்
பத்தாவேபத்தாவே பாராளும்பத்தாவே
உன்-பேச்சைநான்கேளாமல் பெருமோசம்போனேனே
வார்த்தைநான்கேளாமல் வகைமோசம்போனேனே
பெண்புத்தியாலேயல்லோ பிழைமோசம்வந்ததென்றுன்
தப்பாமல்வானம்பத்தா தலையிலிடித்ததங்கே
பேய்கொண்டபாவியைநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
சண்டாளஅண்ணனைநான் சதமென்றுநம்பிவந்தேன்
என்-ஆசைக்கணவா நீ அன்பாகவார்த்தைகேளும்
என்னைப்போல்பெண்சாதி இவ்வுலகிற்கிட்டாளோ
வேசிகிடையாளோ வெள்ளாட்டிகிடையாளோ
தாசிகிடையாளோ தகுமொருத்தியாகாதோ
நாட்டியப்பெண்களிலே நல்லபெண்கிட்டாதோ
உங்கள்குலமதிலே ஒருபெண்ணுங்கிட்டாதோ
மனையாட்டிமாண்டாளென்று மாளவிதியுனக்கேன்
பெண்சாதிமாண்டாளென்று பின்னேமடியலாமோ
எனக்காகநீமாண்டால் ஏசாதோ இவ்வுலகம்
நீ-மாண்டுமடிந்தாக்கால் மண்டலத்தாரென்னசொல்வார்
செத்துமடிந்தாக்கால் சீமையுள்ளாரென்னசொல்வார்
எனக்காகவுன்னுயிரை ஏன்மாய்க்கவந்தீரிப்போ
என்றுமேகணவனுக்கு இயல்பாகத்தானுரைத்து
அண்ணாவேஅண்ணாவே அண்ணியிடவார்த்தையினை
கேட்டீரோ அண்ணாவே கிளிமொழியாள்தன்வார்த்தை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அவளுடையதன்வார்த்தை அறியவேநீர்கேளும்
நான்வருஞ்சேதிதன்னை நாயகியாள்தான்கேட்டு
ஓடிக்கதவடைத்து ஒட்டிச்சுவர்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்துச் சரியாகமண்ணறைந்தாள்
பண்ணுதபாடெல்லாம் பாடுபடுத்திவைத்தாள்
அண்ணாவேஅண்ணாவே ஆரணங்கையிப்போது
ஆக்கினைசெய்யவேண்டாம் ஆழியில்வைக்கவேண்டாம்

இவளை-கல்லிலெழுதவேணும் கண்காணநாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார்சிரிக்கவேணும்
என்றுமேநல்லதங்காள் இயல்பாகத்தானுரைக்க
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
எந்தன்பிறப்பேநீ இளங்கொடியேநல்லதங்காள்
திக்கற்றபாவியைப்போல் தெருவிலுருண்டாயோடி
தாயற்றபாவியைப்போல் தரையிலுருண்டாயோடி
இப்போ-நானுண்டசீமையெல்லாம் நீயாளவேணுமம்மா
நீயாண்டசீமையெல்லாம் நானுளவேணுமம்மா
என்றுமேநல்லதம்பி இன்பமாய்ச்சொல்லுகையில்
அந்தமொழிகேட்டு ஆரணங்கேதுரைப்பாள்
அண்ணாவேஅண்ணாவே அழகுசிகாமணியே
செத்தோரிருந்தோமானால் சீமைக்குஆகாது
இப்போ-மூளியலங்காரி மூதேவிநாயகியை
பூமியில்வைக்கவேணும் போகிறவர்பார்க்கவேணும்
கல்லிலெழுதவேணும் கடுகவேநாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார்நகைக்கவேணும்
என்றுமேதான்சொல்லி இன்பமாய்நல்லதங்காள்
அண்ணனைப்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
என்-அண்ணாவேஅண்ணாவே அன்பாகநீர்கேளும்
ஆசாரிதன்னைநீ அதிகவிரைவுடனே
அழைத்தோடிவாருமென்று அரிவையெடுத்துரைத்தாள்
அப்போதுநல்லதம்பி அதிகதுரிதமுடன்
ஆசாரிதன்னை அவனழைத்தோடிவந்தான்
ஆசாரிதன்னைப்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
பட்டணத்தில்கீர்த்தியுள்ள பரங்கியாச்சாரி
எனக்கு-காசினியில்கோயிலொன்று கட்டிவையுமாசாரி
மாதமொருதிருநாள் மகிழ்ச்சியாய்தானடத்தும்
வருஷமொருதிருநாள் வரிசையாய்தானடத்தும்
என்றுசொல்லிநல்லதங்காள் ஏந்திழையுமப்போது
நல்லதங்காள்ஏழுபிள்ளை நாட்டில்வன்னிமரமாய்
வன்னிமரக்கண்ணாகி மாசின்றிநிற்கின்றாள்
நினைத்தவரமளித்து நீணிலத்தில்வாழ்ந்திருக்க
மச்சானும்மச்சானும் மங்கைநல்லதங்காளை
கண்டுமகிழ்ந்திருவர் கயிலாயஞ்சேர்ந்தார்கள்
சடையிற்பிறையணிந்த சங்கரனார்தன்னருளால்
பாரிலுள்ளஆடவரும் பாலகரும்ஆரியரும்
நாரியருமங்களிக்க நல்லதங்காள்தன்கதையை
அஷ்டதிசைபுகழ அச்சிலிதைதானியற்றி
கற்றோரும்மற்றோரும் களிப்பாய்ப்படிப்பதற்கு



சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியாய்
தம்மாலியன்றமட்டும் தப்பிதங்களில்லாமல்
இம்மானிலத்தோர்புகழ் இரத்தினநாயகர்சன்ஸ்
பச்சைவண்ணநாயகி பார்வதிதன்னருளால்
அச்சிற்பதிப்பித்து அனைவோர்க்குமுதவினர்
ஞானந்தருநூல்களை நாடோறும்அச்சியற்றும்
திருமகள்விலாச அச்சுயந்திரசாலையும்
பண்புடன்படித்தோரும் படிக்கக்கேட்டோரும்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
பால்போல்ருசிக்க பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போல்அனைவோரும் முசியாமல்தான்வாழி
ஓங்கிநால்வேத முயிர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனார்.

நல்லதங்காள் கதை முற்றிற்று.

---

திருமகள் விலாச அச்சகம், சென்னை – 79.

**அநுபவ ஹஸ்தரேகை சாஸ்திரம்**

விளக்கமான அநேகப் படங்கள் அடங்கிய இச் செந்தமிழ் வசன நூலறிவினுல், ஆயுள், விவாக லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்யம், சக்தி, ஐஸ்வரியம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரியசித்தி, சௌக்கியம், இல்லற சுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். அன்றியும் இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது. உங்கள் கையிலுள்ள பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

**சோதிடக் களஞ்சியம்**

இது மிகப் பழமையான சோதிட நூல் அநேக சக்கரங்களுடன் கூடியது. சோதிட சம்பந்தமான நுட்ப விஷயங்களனைத்தும் இதில் கூறப்பட்டிருப்பதால், சோதிட சாஸ்திரத்தை கற்க விரும்புவர்களுக்கு இன்றியமையாத சிறந்த நூல். இப் புத்தகம் அநேக நாட்களாக கிடைக்காமலிருந்தமையால் சோதிட நண்பர் பலர் வேண்டுகோளுக்கிணங்க சுத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கிறேம்.

**அநுபோக ஜாதக ரகசியம்**

கிரகசார சக்கரத்துடன் கூடிய இந்த ஜாதக ரகசியத்தை ஜோசியர்களும் சாதாரணமானவர்களும் சுலபமாக தெரிந்துகொள்ளுவதற்காக ஜாதகம் கணிக்கவும், ராசி கணிக்கவும், அஷ்டவர்க்கம் கணிக்கவும், கோசாரம் பன்னிரு பலாபலன்களும் திசா புந்தி அந்தர பலன்களும் கண்ணுடிபோல் விளக்கி எழுதியிருக்கிறது. இந்த ஒரு புத்தகமே ஜோதிடற்கு போதுமானது.

**பெரியசோதிட சில்லரைக் கோவை**

அநேக ஏட்டுப் பிரதிகளை ஆராய்ந்தும் அவற்றில் சிறந்த முக்கியமான 21-ஜோதிட புஸ்தகங்களை ஆராய்ந்து அவைகளே சரியெனத் தீர்மானித்து முன்னேரா லெழுதி ஏட்டுப்பிரதியா யிருந்ததைத் தற்கால மனித வகுப்பினரில் அநேகருக்குத் தெரியாமலிருந்தமையால், அவைகட்குச் சரியாக உரையெழுதி கால நிர்ணயத்தின் படியே சக்கரங்களமைத்துக் கிரகங்களிருக்கும் காலபலன் லக்ஷணத்தையும் விபரமா யெழுதி சுத்தப் பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேம்.